# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. VI Issue 8 November 2016**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 4 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 12 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 13 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 15 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 18 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 20 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 23 |
| ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1 . . . . . . | 26 |
| **The Life Divine – Outline** . . . . . . | 30 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 34 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 38 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 44 |
| **அன்னை இலக்கியம்** மீன்கொடி. . . . . . . . . . . . . . . . . | 49 |

(முன், பின் அட்டைகளைச் சேர்த்து மொத்தம் 68 பக்கங்கள்)

*ஜீவியத்தின் ஓசை*

**தானே வருவது தரணியைக் கடந்தது.**

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தமிழாக்கம்: வித்யா ரங்கன்

### II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 305

Para 10

On the same basis there would be no difficulty in understanding about the body.

The physiological functionings of the body help to determine the mind's psychological actions.

For the body is not mere unconscious Matter.

It is a structure of a secretly conscious Energy that has taken form in it.

It is itself occultly conscious.

At the same time, it is the vehicle of expression of an overt Consciousness.

That consciousness has emerged and is self-aware.

It is self-aware in our physical energyy substance.

The body's functionings are a necessary machinery.

They are the instrumentation for the movements of this mental Inhabitant.

When the corporeal instrument is set in motion, the Conscious Being emerges.



### II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

இதே அடிப்படையில் நாம் உடலைப்பற்றிப் புரிந்து கொள்வது கடினமாகாது.

மனத்தின் உளவியல் பற்றிய செயல்களை நிர்ணயம் செய்ய உடலின் இயங்கியல் உதவுகிறது.

உடல் என்பது வெறும் தன்னுணர்வற்ற ஜடமல்ல.

அது மறைந்துள்ள விழிப்பான சக்தி ரூபம் பெற்று வெளிப்பட்டுள்ள ஓர் அமைப்பாகும்.

அது சுயமாக நுண்ணயத்தில் விழிப்புப் பெற்றுள்ளது.

அதே நேரத்தில் அது வெளிப்படையான ஜீவியத்தை வெளிப்படுத்தும் கருவியுமாகும்.

அந்த ஜீவியம் வெளிப்பட்டு சுய அறிவு பெற்றுள்ளது.

அது நம் உடற்சக்தியின் பொருளில் தன்னை அறிந்துள்ளது.

உடலின் செயல்பாடுகள் ஒரு அவசியமான இயக்க அமைப்பு.

மனத்தின் இயக்கங்களுக்கு அவை காரணமாகின்றன.

உடல் அசைவில் விழிப்புற்ற ஜீவன் எழும்புகிறது.

It evolves in it and can transmit its mind formations, will formations.

It turns them into a physical manifestation of itself in Matter.

There is a transition in mind formations from mental shape into physical expression.

The capacity, the processes of the instrument must to a certain extent reshape them.

Its workings are necessary and must exercise their influence.

This is before that expression can become actual.

The bodily instrument may even in some directions dominate its user.

It may too by force of habit create involuntary reactions of the consciousness.

It may do so before the waking Mind and Will can control or interfere.

All this is possible because the body has a "subconscient" consciousness of its own.

This counts in our total self-expression.

Looking at this outer instrumentation only, we may conclude that body determines mind.

But this is only a minor truth.

The major Truth is that mind determines body.

In this view a still deeper Truth becomes conceivable.



அது அதில் பரிணாமம் பெற்று தன் மனம் மற்றும் உறுதியின் உருவாக்கங்களை அனுப்ப முடியும்.

அது ஜடத்தில் அவைகளை தன் உடலின் வெளிப்பாட்டாக மாற்றுகிறது.

மனத்தின் வடிவம் உடலின் வெளிப்பாடாக மாறும் வகையில் மனத்தின் உருவாக்கங்களில் நிலைமாற்றம் உண்டு.

கருவியின் திறன், அதன் செய்முறைகள் இவை ஓரளவிற்கு அவற்றை மறுவடிவமைக்க வேண்டும்.

அதன் செயல்பாடுகள் அவசியமானவை. மேலும் அவற்றின் தாக்கத்தை அவை பிரயோகிப்பது அவசியமானது.

இது வெளிப்பாடு உண்மையாக நிகழும் முன்னர் ஏற்பட வேண்டும்.

உடலும் சில இயக்கங்களில் அதை உபயோகிப்பவரை அதிகாரம் செய்யும்.

அது பழக்கத்தின் உந்தலால் ஜீவியத்தின் அனிச்சையான எதிர்ச்செயலையும் உருவாக்கும்.

அது விழிப்புற்ற மனம் மற்றும் உறுதி தம் குறுக்கீட்டை ஏற்படுத்தும் முன்னர் இதைச் செய்கிறது.

உடல் அதற்குச் சொந்தமான ஆழ்மன ஜீவியத்தைப் பெற்றுள்ளதால் இவையனைத்தும் சாத்தியமாகின்றன.

இது நம் மொத்த சுய வெளிப்பாட்டைச் சேரும்.

உடலின் இத்தகைய புறச் செயல்பாட்டை நோக்கினால், நாம் உடலே மனத்தை நிர்ணயிக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

ஆனால் இது ஒரு சிறிய உண்மை.

மனம் உடலை நிர்ணயிப்பது பெரிய உண்மை.

இந்தப் பார்வைக்கோணத்தில் ஒரு அதிக ஆழ்ந்த உண்மை நமக்குப் புலப்படுகிறது.

There is a spiritual entity ensouling the substance that veils it.

This is the original determinant of both mind and body.

The mind can transmit its ideas and commands to the body.

It can train it to be an instrument for new action.

It can even so impress it with its habitual demands or orders.
Then the physical instinct carries them out automatically.

Even when the mind is no longer consciously willing them, it does so.
The mind can learn to determine the reactions of the body.

It can do so even to the overriding of its normal laws of action.
The relation between these two elements of our being has many aspects.
These and other unaccountable aspects become easily understandable.
For there is the secret consciousness in the living matter.
It is that which receives from its greater companion.

In the body this consciousness perceives or feels the demand on it.
It obeys the emerged or evolved consciousness which presides over the body.



சாரப்பொருளை மறைத்து அதைச் சுற்றி எழுந்துள்ள ஒரு ஆன்மிக ஜீவன் உள்ளது.
இதுவே மனம் மற்றும் உடலை நிர்ணயிக்கும் மூலமான ஒன்று.
மனம் தன் கருத்துகள் மற்றும் ஆணைகளை உடலுக்கு அனுப்ப முடியும்.
அது புதிய செயலுக்கு ஏற்ற கருவியாக உடலுக்குப் பயிற்சி அளிக்க முடியும்.
மனம் அதன் இயல்பான கோரிக்கைகள் அல்லது உத்தரவுகளால் உடலை ஈர்க்கவும் முடியும்.
அதன்பின் உடலின் உந்துணர்வு அவற்றை இயல்பாக நிறைவேற்றும்.
மனத்திற்கு விழிப்பான நாட்டமில்லை என்றாலும் உடல் அதைச் செய்யும்.
உடலின் எதிர்ச் செயல்களை மனம் நிர்ணயிக்கக் கற்றுக் கொள்ள முடியும்.
அதன் செயல்பாட்டின் பொதுவான சட்டங்களை மனம் புறக்கணிக்கவும் முடியும்.
இவ்விரு கரணங்களுக்கும் உள்ள தொடர்பு பல அம்சங்களைக் கொண்டது.
இவையும் கணக்கில் வராத பிற அம்சங்களும் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடியவையாகின்றன.
ஜீவனுள்ள ஜடத்தில் ஜீவியம் மறைபொருளாக உள்ளது.
அதன் உயர்ந்த துணைக் கரணத்திலிருந்து பெற்றுக் கொள்வது இந்த ஜீவியமே ஆகும்.
உடலில் இந்த ஜீவியம் அதன் மேல் எழுப்பப்படும் கோரிக்கைகளை புரிந்து அல்லது உணர்ந்து கொள்கிறது.
உடலின்மீது தலைமை கொண்ட பரிணாமம் பெற்ற ஜீவியத்திற்கு அது அடிபணிகிறது.

Finally, the conception of a divine Mind and Will creating the cosmos becomes justifiable.
There are perplexing elements in it.
Our reasoning mentality refuses to ascribe them to an arbitrary fiat of the Creator.
They find their explanation as inevitable phenomena of an emerging Consciousness.
It is emerging with difficulty out of its opposite.

But it has a mission to override these contrary phenomena.

Its mission is to manifest by a slow and difficult evolution its greater reality.

Contd...

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மரபு உலகை அறியாது. இறைவன் எப்படி உலகை உற்பத்தி செய்தான் என்பதை ரிஷிகள் அறியவில்லை. அகம், புறமாக பிரம்மம் பிரிந்தபொழுது புறம் உலகமாயிற்று என பகவான் அக்கேள்விக்கு பதிலிறுக்கிறார். பிரம்மம் அனைத்தையும் கடந்தது என்பதால் உலகை சிருஷ்டிக்கும் திறனற்றது என்பது மரபு கருதுவது. பகவான் அதை ஏற்கவில்லை. சிருஷ்டிக்கும் திறனற்றது பிரம்மம் என்பதை பகவான் சிருஷ்டிக்கும் திறனைக் கடந்தது என்று கொள்கிறார். பிரம்மம் சிருஷ்டிக்கும், சிருஷ்டி செய்யாமலுமிருக்கும் என்று கூறி உலகம் பிரபஞ்சத்தால் சிருஷ்டிக்கப்பட்டதே எனவும் கூறுகிறார். மரபு சச்சிதானந்தத்தைச் சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் பிரித்துக் கண்டது. அவை மூன்றல்ல, ஒன்றின் மூன்று அம்சம் என பகவான் கூறுகிறார். மனிதன் காலத்தில் மனத்தால் வாழ்பவன். ரிஷி சமாதியில் காலத்தைக் கடக்கிறார். சத்திய ஜீவியம் காலத்துள் கடந்த நிலையை ஏற்படுத்துகிறது. அதன் வழி மூன்றாம் நிலைக்காலம் உற்பத்தியாகிறது.

**இந்த லோகத்தில் யுகம் க்ஷணமாகும். நினைத்தவை நினைத்தவுடன் நடக்கும்.**



முடிவாக, தெய்வீக மனம் மற்றும் உறுதி பிரபஞ்சத்தை உருவாக்குகிறது எனும் கருத்து நிரூபணம் ஆகிறது.
அங்குக் குழப்பமடையச் செய்யும் பகுதிகள் உண்டு.
ஒரு சிருஷ்டிகர்த்தாவின் தன்னிச்சையான உத்தரவால் சிருஷ்டி எழுந்தது என்பதை நம் பகுத்தறிவு ஏற்க மறுக்கிறது.
உள்ளிருந்து எழும் ஜீவியத்தின் தவிர்க்க முடியாத நிகழ்வுகள் இவை எனும் விளக்கத்தை அவை காண்கின்றன.
தனக்கு எதிரானதிலிருந்து மிகுந்த சிரமத்துடன் அது வெளிப்படுகிறது.
ஆனால் முரண்பாடு எனும் நிகழ்வை மீறும் பணியை அது மேற்கொண்டுள்ளது.
நிதானமான கடினமான பரிணாமத்தின் மூலம் உயர்ந்த சத்தியத்தை வெளிப்படுத்துவது அதன் நோக்கம்.

தொடரும்...

## ஸ்ரீ அரவிந்த சுடர்

‘பிரம்மம்’ பிரபஞ்சத்தைக் கடந்தது. பிரபஞ்சமும், வாழ்வும் அதன் ஆதரவால் வாழ்கின்றன. மரபு ஞானம் முடிவடைந்ததாகக் கொண்டு, மேலும் சிந்திப்பதை மரபுக்குத் துரோகம் எனக் கருதுகின்றனர். *உள்ளதை உரைப்பதை உயர்வெனக் கண்டு பெருமிதம் கொள்கின்றனர்.* அறிவை விட்டுயர்ந்து ஜீவியத்தை அடைவதால் மனிதன் மேல்மனத்தைக் கடந்த பிரபஞ்ச ஜீவியத்தை அடைகிறான். அங்கு ஜடம் சக்தியாகக் காட்சி தருகிறது. ஆன்மாவே அங்குச் சக்திமயமாகிறது. இரண்டும் இணைகின்றன. இணைப்பை உயர்த்தலாம். ‘பிரம்ம’ ஜீவியத்தை அடைந்தால் *ஜடமே ஆன்மாவாகத் தெரிகிறது.* மீண்டும் ஜடமும், ஆன்மாவும் ‘பிரம்ம’ ஜீவியத்தில் இணைகின்றன. இது ஆன்மாவின் முழுமை. *ஆன்மிக முழுமையை வாழ்விலும் முன்னோர்கள் முழுமையாகக் கண்டனர்.* அதை நிலைநிறுத்த வாழ்வை ரிஷிகள் உபதேசத்தால் நடத்தினர். பல ரிஷிகளும், முனிவர்களும் கிரகஸ்தரானார்கள். *ஆன்மாவை வாழ்வில் வெளிப்படுத்துவதைத் தர்மம் எனக் கொண்டனர்.*

## இம்மாதச் செய்தி

**அன்னையை ஏற்றவர் மனதில்**
**அன்பு (Divine Love) உற்பத்தியானால்**
**அவர் அனைவருக்கும்**
**அதிர்ஷ்டத்தின் ஊற்றாவார்.**



**சாவித்ரி**

**Page 190: In sudden scintillations of the Unknown**
*தெரியாத பெரியது திடீரென புல்லரித்து பூரிக்கிறது*

- ✡ தெளிவில்லாத சப்தம் தெய்வ சத்தியமாயிற்று
- ✡ அர்த்தமற்றதாய் தோன்றியவை சத்தியத்தைக் கக்கின
- ✡ கண்ணுக்குத் தெரியாத காத்திருக்கும் உலகினின்று குரல் எழுந்தது
- ✡ பிரம்மத்தின் சொற்துளிகளை வாய் விட்டுப் பேசின
- ✡ புதிரான சொல்லை உடலின் ஆடையாக்கி
- ✡ சூட்சும சட்டத்தின் விவேகமான யந்திரம்
- ✡ படிக்க முடியாத சுமுகம் தெளிவின் முத்திரையாயிற்று
- ✡ உருவத்தையும் நிறத்தையும் பயன்படுத்திப் புதுப்பித்து
- ✡ காலத்தின் கதிரவனாக எழும் இரகஸ்யங்கள்
- ✡ மறைந்த ஆழத்துள், பசுமையான காட்டுப் புறத்தில்
- ✡ மகிழ்வெனும் காட்டில் ஆனந்தம் ஆபத்தைக் கட்டியணைக்கிறது
- ✡ பாடகரின் நம்பிக்கையெனும் மறைந்த சிறகில்
- ✡ நீல பொன்னிற சிவந்த தழல் பொறியாக எழுந்தது
- ✡ அவளுடைய மறைந்த சந்துகளில், வயல்வெளியின் எல்லையில்
- ✡ இசை எழுப்பும் நீரோடைகள், அமைதியான நீர்ப்பரப்புகள்
- ✡ பொன்னான ஆனந்தப் பலனின் பொறிகளைக் கண்டாள்
- ✡ கனவில் மலர்ந்த சரஸ்வதியின் மலரழகு

✡ இதயம் சந்தோஷத்தால் மாறும் அற்புதம் போல

✡ அவள் சூரிய ரஸவாதப்பிரகாசத்தைக் கண்ணுற்றாள்

✡ நாத்திக மலரின் செவ்வொளி வெடித்தது

✡ ஆன்மிக அன்பெனும் தியாக மரத்தில்

✡ அவள் தூக்க மகிமையான மதியத்தைக் கண்டாள்

✡ மீண்டும் மீண்டும் எழும் நாழிகையின் தொடர்

✡ பூதம் பூச்சான எண்ணத்தின் நடனம் புதிரான நதியின் மீது

✡ காலை ஊன்றிப் பார்க்காமல் மேலே ஊர்ந்து செல்லும்

✡ ஆசையெனும் ரோஜா ஆர்வமெனும் சிரிப்பைத் தந்தது

✡ ஆசைப்பட்டவரின் அணைப்பினின்று அகன்று ஓடுவது போல்

✡ கற்பனைச் சதங்கையொலி காதில் மகிழ

✡ அவள் சூட்சும சக்தியின் உயிருள்ள அடையாளம்

✡ நெருங்கிய நிஜ உருவமாக அவற்றை அவன் கண்டான்

✡ மனிதர் வாழ்வைவிட மாட்சிமை பொருந்திய அவ்வாழ்வு

✡ மறைந்த சத்தியம் இதயமாகத் துடித்தது

✡ நம் நினைவும் உணர்வும் அங்கு உயிரோவியமாகி

✡ தேடிக் கண்ட ரூபம் அங்குச் சுயமாக உள்ளிருந்து உருவாகி

✡ மௌனத்தின் தோழன் அவன் புனித சிகரத்தில் தொட்டு

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் தன்னை கடவுளாக அறிந்து பிரபஞ்ச சிருஷ்டியில் கடவுள் எண்ணத்தைப் - திருவுருமாற்றத்தை - பூர்த்தி செய்ய முடிவு செய்வது பூரண யோகம்.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/35. அடிமன எண்ணம் சமர்ப்பணமானால் மனம் முனிவர் மனமாகும். சிந்தனையின்றி புரியும்.

- சிந்தனையின்றி புரியும் நேரம் அனைவர்க்கும் உண்டு. அந்த நேரமுள்ள மௌனம் இது.
- அடி மனம் பிரபஞ்சத்தைத் தழுவும். அது மௌனமாக செயல்படும்.
- மனித சுபாவ அம்சங்கள் செயல்படும் மனமிது.
- மருமகள் மரியாதையில்லாமல் பேசுகிறாள். மருமகன் நிலையில்லாமல் பேச்சை மாற்றிப் பேசுகின்றான். ஓட்டர் பணம் வாங்கிக் கொண்டு எதிர்கட்சிக்கு ஓட்டுப் போடுகிறார் போன்றவை மனித சுபாவம் வெளிப்படும் இடங்கள்.
- *அடி மனம் மனித சுபாவம் ஆழ்ந்து செயல்படுமிடம்.* அதன் வேர் அதைக் கடந்த பாதாளம், ஜட இருளில் உள்ளது.
- சிந்தனை எழுவது எண்ணம் உருவாவது.
- உருவாகும் எண்ணம் நம்மைச் சத்தியத்திலிருந்து பிரிக்கிறது.
- அஞ்ஞானம், தமஸ், பிரிவினை என்பனவற்றால் ஜடம் உருவாயிருக்கிறது.
- அஞ்ஞானம் ஞானத்தால் கரையும்.
- தமஸ் செயல்பட விரும்பாத மனநிலை.
- *அன்றாட செயலில் பாக்கியான வேலையுண்டு, ஒத்திப் போடுபவையுண்டு. அவை தலையெடுக்கும் நேரம் க்ஷணம் தாமதிக்காமல் செயல்பட்டால், தமஸ் கரைய ஆரம்பிக்கும்.*
- *கடைசியாக இருப்பது பிரிவினை.* சிந்தனை பிரிவினை.

- சிந்திக்காது மறுத்தால் பிரிவினை முதல் நிலையில் கரைந்து மௌனம் எழும்.
- *மௌனம் ஐக்கியத்தின் முதல் நிலை.*
- ஜோதி அடுத்த நிலை.
- நேரடி ஞானம் **(intuition)** அதற்கடுத்த நிலை.
- ஞானமும், அஞ்ஞானமும் கலந்த நிலை - **Overmind**, கடவுள் நிலை - அடுத்தது.
- அஞ்ஞானக் கலப்பற்ற ஞானம் சூன்யத்தையும் மௌனத்தையும் கடந்த பூரண ஞானம் பெறும். அது சத்திய ஜீவிய நிலை.
- இதனுள் நுழைய மௌனம் நிலைக்க வேண்டும்.
- நிலைத்த மௌனம் விலகி, அல்லது முதிர்ந்து ஜோதியாகும்.
- ஜோதியை விட்டகன்றால் ஞானம் நேரடியாக உதயமாகும்.
- நேரடியான ஞானம் ஓரளவு ஞானமாகும். அஞ்ஞானம் உடனிருக்கும்.
- சொத்துக்கான வழக்கில் நம் பக்கம் நியாயமிருந்தால் மனம் நியாயத்தைக் கருதும்.
- *நியாயம் சிந்தனையாகவோ நினைவாகவோ இருந்தால் நம்மை வெற்றியிலிருந்து பிரிக்கும்.*
- நியாயத்தை நினைக்காத மனம் பளிச்சென ஜோதியைக் காணும். ஜோதி காட்சியாகும், சொத்து நம்மிடம் வருவது காட்சியாகத் தெரியும்.
- காட்சியைக் கருதாத பொறுமை "கேஸ் ஜெயித்து விட்டது" எனக் கூறும். அது நேரடியான ஞானம்.
- இந்தக் கட்டங்களில் பொறுமை சிரமம்.
- பொறுமை இருந்தால் எதிராளி வீட்டிற்கு வருவான். கேஸ் வாபசாகும். உடன் அஞ்ஞானமிருக்கும்.



- நம் வக்கீல் "விடக்கூடாது" என்பார். உடன் பிறந்தவர் "நம்பாதே" என்பார்.
- அஞ்ஞானக் கூற்றுகளை நம்பாவிட்டால் கேஸ் முடிந்து சொத்து வரும்.
- மனத்திலிருந்து **Spiritual range of Mind** - முனிவர், ரிஷி, யோகி, தெய்வம் - வழியாக உயரும் வழியை உதாரணம் மூலம் கூறினேன்.
- இவை பெரு நிலைகள். தொடர்ந்து போகலாம். அதிக சிரமமான கட்டங்கள் எழும்.
- இதற்கடுத்த நிலை *பொன்மூடி*.
- வழக்கில் பொன் மூடி என்பது நாட்டிலுள்ள சொத்துரிமை சட்டம். உதாரணமாக பெண்ணுக்குச் சொத்துரிமை வருவது பொன்மூடியை ஓர் அம்சத்தில் கடப்பதாகும். ஓராயிரம் அம்சங்களில் கடந்தாலும் பொன் மூடி விரிசல் விடுமே தவிர விலகாது.

## ஜீவிய மணி

*ஊரே உலகம் எனும் சிறுவன் நாட்டைச் சுற்றிப் பார்த்தால் மனம் விரிவடையும். கல்விச் செல்வம் அவன் அறியாமையைக் கரைக்கும். குறுகிய, சிறிய அகந்தை மேல்மனத்தில் மனத்தாலும், காலத்தாலும், சிறியதாலும் கட்டுண்டு ஜடமான வாழ்வை தாவர, விலங்கினத்திற்கு உயர்த்தி மனிதனை இன்றுவரை வாழ உதவியது. பள்ளிப் படிப்பு அஸ்திவாரம். அதையே முடிவாகக் கொள்வது அறியாமை. அகந்தையின் காலம் முடிந்து, ஆத்மாவின் காலம் பிறந்தபின் சுயநலமான மனிதன், தன் பரநலத்தைப் பிரபஞ்ச முழுவதும் வியாபிக்கச் செய்தால், அகந்தையின் ஒரு நிலை அழியும்.*

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 130. குதர்க்கமான கோணல் அதிகாரம் திரும்பி அடக்கமாக வருவது

- குதர்க்கம் வேறு, கோணல் வேறு, அதிகாரம் தனிப்பட்டது.
- இவை சேர்ந்து அதிகப்பிரசங்கித்தனமாக ஒரு நேரம் செயல்பட்டிருந்தால் அது மாறி அடக்கமாக பிற்காலத்தில் வரும்.
- 45 வயதானவர் அவரை விட 10 வயது சிறிய இளைஞரை இது போல் ஒரு சமயம் தவறாகப் பேசினார்.
- விவரம் தெரிந்து இளைஞர் அவரைச் சந்திக்க வந்த பொழுது அவரில்லை. அவருடைய தத்துவ ஞானி நண்பன் “அவர் எப்படி உங்களை அவமானப்படுத்த முடியும்? *நீங்கள் என்பது உங்கள் ஆத்மாவாயிற்றே*, அது கறைபடாதது” என்றார்.
- 2 ஆண்டிற்குப் பின் இவ்விருவரும் செய்த விஷமம் பெரியதாகி இளைஞன் ஸ்தாபனத் தலைவரிடம் இவர்களைப் பற்றிய உண்மைகளைக் கூறினான். *தலைவர் அவமானப்பட்டுப் பொங்கி எழுந்தார்.*
- இளைஞன் போனவுடன் இவ்விருவரும் விஷமத்திற்குத் துணையான வக்கீலும் காரில் வந்து இறங்கினர்.
- தலைவர் விரைந்தோடி “*போங்கடா, என்னை வம்பில் இழுத்து விட்டீர்கள்*” என இரைந்து அவர்கள் மீது கோபப்பட்டார்.
- இளைஞன் தன் நிலை அவர்களுக்கு வந்ததை எண்ணி, “உங்கள் ஆத்மா கறைபடவில்லை” என அவர்கள் தனக்குக் கூறியதை தான் அவர்களுக்கு திரும்பக் கூற நினைத்தான்.
- வாழ்வில் பெருத்த அவமானமானது யோகத்திற்கு வாயிலாகும்.
- டார்சியை எலிசபெத் திட்டியதும், அதுபோன்ற பூரண யோக வாயில்.
- இதுவரை வாயில் யோக வாயிலாக எழுதினேன்.
- வாழ்வும் வாயிலைத் திறக்கும் என இதையும் கூறுகிறேன்.
- நக்கீரன் பெருமானைக் குற்றம் சொல்லியதும் யோக வாயில்.
- திரௌபதி துகிலுரிந்ததும் அதுபோன்றதே.
- குடும்பத் தலைவர் இறந்து குடும்பம் நிர்க்கதியானது யோக வாயிலே. அதை எவரும் அப்படி எடுத்துக்கூற மாட்டார்கள்.
- திவாலான கம்பெனி - **Chrysler** - உலகப் பிரசத்தி பெற்றதும், **Steve Job** அவனுடைய கம்பெனியிலிருந்தே விலக்கப்பட்டதும் வாயில்களே ஆகும்.
- பெரும் வெற்றி பெற்ற சர்ச்சில் கட்சி பெற்ற பெருந் தோல்வியும் வாயிலாகும்.
- அன்பர் மீது கேஸ் வந்தால் அதுவும் வாயில் என்றே கொள்ளலாம்.
- *அன்னை செய்வன அனைத்தும் விபரீதம்* - “அன்பர் கேட்டதையே எதிரி தன் வாக்கு மூலமாக” எழுதியதும் நடந்தது.
- சொத்து வழக்கில் 10 வருஷமாக விலையேறி விட்டதால் பணம் போட்டவர் சொத்தைக் கேட்டார். அவர் வக்கீல் பிராது எழுதும் பொழுது ஆரம்ப முதலீட்டைத் தரவில்லை எனக் குறை சொன்னார்.
- ஆரம்ப முதலீடு வெறும் 2½ லட்சம், அன்றைய விலை 20 லட்சம்.
- எழுதிய வக்கீல் பிரமித்து விட்டார். எப்படி எழுதினேன் என வியந்தார். எதிரியை நம் வழக்கை ஆடும்படிக் கூறுவது அன்னை.

#### ஜீவிய மணி

*அழைப்புமின்றி ஆர்வமுமின்றிச் செய்வதனைத்தும் அடுத்த ஜென்மத்திற்குரிய தயாரிப்பாகும்.*

## அஜெண்டா

**April 12-13, 1962-இல் அன்பு அலை மேலிருந்து வந்து அன்னையிடம் சேர்ந்தது. அனைத்தும் personal not individual.**

- நாம் அன்பை மனதில் ஒரு கருத்தாக அறிவோம்.
- ஒருவர் மீது எழும் அன்பு உணர்வாக வெளிப்படும்.
- அன்பான ஊரையடைந்தவுடன் எவரும் அன்பாகப் பழகுவதைக் காணலாம்.
- *பிரபஞ்சத்தின் அன்பு அலையாக அதிர்வாக பிரபஞ்சத்தில் பரவியதை அன்னை* **personal**-*ஆக அறிந்தார்.* **T.V.**-யில் வரும் **news** அனைவருக்கும் உண்டு. **T.V. set**-க்கு அது **individual**-ஆக வருகிறது. செல்போன் செய்தி **personal**-ஆக வருகிறது.
- இந்த அனுபவம் உலகத்திற்குப் புதியது. அன்னை பலமுறை அஜெண்டாவில் எழுதுகிறார்.
- ரயில், கார், விமானம், தபால், தந்தி முதலில் வந்தது உலகுக்கே புதியது போல் அன்பு 12-13 தேதிகளில் உலகுக்கே புதியதாய் வந்தது. *எவருமே ரயில் வந்ததை அறியாமல், அதில் ஏறாமலிருப்பது போல் வெள்ளமாக அன்பு உலகுக்கு வந்த பின்னும் எவரும் அதை அறியவில்லை என அன்னை கூறுகிறார்.*
- ரயில் வந்தது எவருக்கும் தெரியாவிட்டாலும், சரக்கு டெல்லியிலிருந்து 3 மாதத்தில் வருவது 3 நாளில் வருவதை அனைவரும் அனுபவிப்பது போல் அன்பு சூழலில் வந்ததால் கொடுமைக்காரன் கடுமையிழந்து பழகுகிறான். ஒரு சொல் தெரியாததால் பிரம்பால் 10 அடி வாங்கிய மாணவன் அன்பு வந்தபின் ஒரு அடி பெறுகிறான். வராத சொல்லும் அவனுக்கு வருகிறது. இது சூழல் தரும் பலன்.
- 1956 **February** 29-இல் சத்திய ஜீவியம் வந்ததை எவரும் அறியவில்லை. ஆனால் உலகில் மரணத்தருவாயில் உள்ளவர் பலர் அதிசயமாகப் பிழைக்கிறார்கள். மலைச்சரிவின் பாதையில் வந்த கார் தடம் மாறி கவிழப்போகும் பொழுது உள்ளே இருந்தவர் அன்பரானதால், கவிழாமல் தப்பிக்கிறது.



- ரோடில் டிராபிக் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு ஆண்டில் 30 சாவு உள்ள இடத்தில் சாவு 3 ஆகிறது. அஜெண்டா முழுவதும் அன்னை இது போன்ற நிகழ்ச்சிகளைக் கூறுகிறார். *மலேரியா, பெரிய அம்மை, காலரா போன்ற வியாதிகள் சர்க்கார் முயற்சியாலும், எதுவுமின்றியும் பெரும்பாலும் மறைகின்றன.* கிராமத்தில் ஆண்டில் 70 பிள்ளைகள் பள்ளிக்குப் போனது 170 எனவும் 700-ஆகவும் மாறுகிறது. மாமியார் கொடுமை கடுமையை இழக்கிறது. தடம் மாறி மருமகள் கொடுமையாகிறது. கேட்காமல் பல நாடுகள் சுதந்திரம் பெறுகின்றன. சுதந்திரம் வந்தபின் சுபீட்சம் வருகிறது. 1940-இல் கொசு நிறைந்த ஊரில் வெளியில் போய் உள்ளே வந்தால் 4 அல்லது 5 பேர் யானைக்காலைக் காண வேண்டும். இப்பொழுது அதே ஊரில் அவர் கண்ணில் யானைக்கால் 4 அல்லது 5 ஒரு மாதத்தில் படுகிறது. கிராமங்களில் மரம் நிறைந்த இடங்களில் ஆண்டுதோறும் ஒன்று அல்லது இரண்டு இளம் பெண் தூக்குப் போடுவதுண்டு. காலம் மாறியபின் 5 அல்லது 6 வருஷத்தில் அது போன்ற நிகழ்ச்சி ஒன்று எனக் காண்கிறோம். வீதியில் போனால் காரசாரமான கடினச்சொற்கள், அவச்சொற்கள், கெட்ட சொற்கள் கேட்ட ஊரில் அது பெரும்பாலும் மறைந்து விடுகிறது. *இவை நாகரிகத்தின் சின்னங்கள்.* அன்று விதவை மொட்டையடித்து வெள்ளை சீலைகட்டி அபசகுனமாக ஊரில் வெளிவரத் தயங்குவாள். மொட்டை வெள்ளை சேலை போய் குங்குமப் பொட்டும் நிலைப்பதை நாம் சமூகம் மாறுகிறது, காலம் மாறுகிறது, புதிய சட்டங்கள் வருகின்றன, கல்வி பரவுகிறது என நினைப்பது சரியானாலும் சத்திய ஜீவிய சூழல் ஏற்படுத்திய மாறுதல்களில் இவற்றையே கூற முடிகிறது. *சைனாக்காரன் திரும்பிப்போனதும், க்யூபாவில் நெருக்கடி விலகியதும், கொரியா அமைதியானதும், சைனா உலகை ஆள முயலாததும்,* பெர்லின் சுவர் இடிந்து, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விடுதலை பெற்று சோவியத் எதேச்சாதிகாரம் தற்கொலை செய்து கொண்டதும், சட்டம் அழித்த அடிமை 100

ஆண்டிருந்தது ஒரே ஆண்டில் நடைமுறையில் மறைந்ததும் சத்திய ஜீவியம் செயல்படுவதால் என நம்மால் அறிய முடிவதில்லை. *பணம் ஏழைநாடுகள் உட்பட எல்லா நாடுகளிலும் பெருவாரியாகப் பெருகுவது எப்படி என யாராவது விளக்கிக் கூறியிருக்கிறார்களா?*

○❖○

## ஜீவிய மணி

*ஷெர்லக் ஹோம்ஸ் 100 ஆண்டிற்கு முன் பிரபலமானது. அதை உலகம் துப்பறியும் கதையாக அறியும். பகுத்தறிவு ஞானமாக உலகில் மாறுவதை* **(reason matures into intuition)** *உலகுக்கு அறிவிக்கும் இலக்கியமாக நான் அதை அறிவேன். 56 சிறுகதைகளும் 4 நாவல்களும் அடங்கிய நூல் அது. குற்றத்தை போலீஸ், மக்கள், பலியானவர் அனைவரும் அறிவால் புரிந்து கொள்கிறார்கள். ஷெர்லக் ஹோம்ஸ் பகுத்தறிவு ஞானமாகும் தெளிவால் புரிந்து கொள்கிறான். குற்றவாளிக்குத் திறமை அதிகம் சூட்சுமம் நுணுக்கம் அதிகம், ஆனால் அறிவு குறைவு. ஒரு அறிவாளி குற்றவாளிக்கு யோசனை கூறினால் அவனால் 100 பேருக்குத் திருடும் வழியை உயர்ந்த முறையில் கூற முடியும். ஒரு பேராசிரியர் அதுபோல் ஏராளமான குற்றவாளிகட்கு மறைமுகமாக யோசனை கூறி அவன் கோடிக்கணக்காகச் சம்பாதிக்கிறான். அவர் சம்பந்தப்பட்ட குற்றங்களை எளிதில் கண்டு-பிடிக்க முடியாது. கண்டுபிடித்தால் நிரூபிக்க முடியாது. ஷெர்லக் ஹோம்ஸ் இதையறிந்தும் அவர்களைப் பிடித்து தண்டிக்க முடிய-வில்லை. ஓரிரு சமயம் தண்டனை கொடுக்க முடிந்தாலும் மூலகர்த்தாவை எட்ட முடியவில்லை. 20 ஆண்டுகளின் முயற்சியால் ஒரு திங்கட்கிழமை 1000 பேரையும் மூலகர்த்தாவையும் கைது செய்து தண்டிக்க ஏற்பாடானபின் மூலகர்த்தா ஹோம்ஸை அழிக்க முயன்று இருவரும் இங்கிலாந்திலிருந்து ஓடி சுவிச்சர்லாந்தில் ஒரு நீர் வீழ்ச்சி எழும் மலை ஓரத்தில் சந்தித்து இருவரும் வீழ்ந்து இறந்து விடுகின்றனர். மூலம் தப்பித்தது. மற்ற அனைவரும் கைதானார்கள். வாசகர்கள் செய்த பெரிய புரட்சியில் கதாசிரியர் ஷெர்லக் ஹோம்ஸை "உயிர் பிழைக்கச் செய்து" கதைகளைத் தொடர்ந்து எழுதினார் என்பது வரலாறு. இது 1901 வாக்கில் கதாசிரியரின் கற்பனையில் எழுந்தது. இக்கதாசிரியர் பெயர்* **Conon Doyle** *கானன் டாயல்.*

**குற்றமும், குற்ற மனப்பான்மையும் அழியும் காலம்**
**பகவான் பிறந்த பின் எழுந்தது.**



## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

23. நம்மால் முடியாதது அன்னையால் முடியாதது என அர்த்தமில்லை. நாம் அன்னைமீது வைக்கும் நம்பிக்கை இப்படியொரு திடமானதாக இருக்க வேண்டும். பிரச்சனையென எழுந்தால், நம் பர்சனாலிட்டியை விலக்கி, பிரச்சனையை அன்னையிடம் சமர்ப்பித்தால், பிரச்சனை விரைவில் தீரும்.

மனிதனுக்கு தான் முக்கியம். அவனே அவன் உலகம். தனக்குத் தெரிந்ததற்குமேல் உலகில் எதுவுமில்லை என்று எப்படி ஒரு மனிதனால் நினைக்க முடியும் என நாம் ஆச்சரியப்படுவதுண்டு. நேரம் வரும் பொழுது நாம் அதுபோல் நினைப்பதை நாம் கருதுவதில்லை. அன்னை அதுபோன்ற மனநிலையை **unconscious** தன்னை அறியாத மனநிலை என்கிறார். இந்த நிலை எல்லோர்க்கும் உண்டு. படிக்காதவன், அனுபவமில்லாதவனுக்கு மட்டுமல்ல. ஜில்லா கோர்ட் வக்கீல்கள், சென்னையில் பிரபலமான டாக்டர்கள்வரை இந்த நிலையுண்டு. கவர்னர் பிரகாசாவுக்கு இருமல். கவர்னருடைய டாக்டர், சென்னையில் பிரபல டாக்டர்கள் பார்த்தனர். பலனில்லை. இராஜாஜி அவரைப் பார்க்கப் போனார். குருசாமி முதலியாரைக் கேட்டீர்களா என்றார். குருசாமி வந்தார். பிரகாசாவுக்கு உடல் நலமாயிற்று. என்ன சொன்னார் டாக்டர் என்று கேட்டனர். கவர்னர் "அவர் ஒன்றும் சொல்லவில்லை" என்றார். ஹை கோர்ட் வக்கீல் சிவில் கேசில் ஜாமீன் கேட்கிறார்! இவர் ஹை கோர்ட் ஜட்ஜ்.

- *நமக்குத் தெரிந்ததே முடிவு. அதைக் கடந்த முடிவில்லை. மேலும் நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஒருவரில்லை என்ற மனப்பான்மை எல்லா நிலைகளிலும் உண்டு.*
- *சுதந்திரம் வந்த அடுத்த மாதம் டெல்லி கலவரத்தை எப்படி அடக்குவது எனப் பட்டேலுக்குத் தெரியவில்லை. மவுண்ட் பேட்டனைக் கேட்டனர்.*

- *பட்டதாரிகள் ஒரு சொல்லுக்கு அர்த்தம் புரியவில்லை என்றால் டிக்ஷனரியைப் பார்த்தீர்களா என்று கேட்பார்கள். 'எனக்கு அது தோன்றவில்லை' என்பார்கள்.*
- *கான்சருக்கு மருந்தில்லை என்றால் ஆயுர் வேதத்தை நினைக்க மாட்டார்கள். மருந்தால் முடியாது என்றால் அன்னைக்குப் பிரார்த்தனை செய்து என்ன பலன் என்பது அன்னையாலும் முடியாது என்று நினைப்பதாகும்.*
- *ரசீது இல்லாமல் கொடுத்த பணம் எப்படி வரும். அன்னைக்குப் பிரார்த்தனை செய்வது பிரயோஜனமில்லை என நினைப்பது அதுபோன்ற மனநிலை.*
- *நமக்குத் தெரியாதது எவருக்கும் தெரியாது என்று நினைப்பது அர்த்தமற்றது. தொழிலில் உள்ளவர்க்குத் தெரியும். எந்த வேலையிலும்* (Professionals) *தொழிலில் உள்ளவர்களைக் கலப்பது முறை.*

சோகம் வந்தால் அன்னை "மனிதன் சோகத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். அது இவனைப் பிடித்துக் கொண்டில்லை" என்கிறார். மனிதன் விட்டுவிட்டால் சோகம் மறையும். என்னால் விட முடியவில்லை என்பவன் எனக்குச் சோகத்தை விட மனமில்லை என்பதாகும். இந்த நிலை ஆத்மாவுக்கே உண்டு என பகவான் கூறுகிறார். ஆத்மாவைக் கண்டு பகவான் சிரிக்கிறார். ஆத்மா பிரச்சனைகளை விட்டவுடன் அடுத்த நிமிடம் பிரச்சனை மறைகிறது. விட முடியவில்லை என்பவர் அன்னையை அழைத்தால் அது விடுபடும். என்னால் அன்னையை அழைக்க முடியவில்லை என அன்பர் சொல்லக் கூடாது. முடியாது என்பவர் ஒருமுறை அழைக்கலாம். சற்று பொறுத்து இரண்டு அல்லது மூன்று முறைகள் அழைக்கலாம். தொடர்ந்து முயன்றால் அரை மணி அழைப்பதற்குள் சோகம் விட்டு விடும். நாமும் பிரச்சனையும் ஒன்றாக இருப்பது நமக்குத் தெரியவில்லை.

ஜில்லா கோர்ட் பெரிய வக்கீலுக்கு மைனர் சொத்தை வாங்கும் முறை தெரியவில்லை. கோர்ட்டில் எவருக்கும் தெரியவில்லை என்றால், வக்கீல் அனுபவத்தில் அது இல்லை



எனப் பொருள். படித்து அறிவது தொழில். படிக்காமல் அனுபவத்தை மட்டும் பாராட்டுவது படிக்காதவருடைய மனநிலை. படித்தாலும், அனுபவம் பெற்றாலும், நாம் வேறு பிரச்சனை வேறு என்றில்லையானால், பிரச்சனையுடன் நாம் இரண்டறக்கலந்தால், *நாமே பிரச்சனையாவோம்*. அது தீர்க்க முடியாத நிலை.

- *பிரச்சனையை நம்மிடமிருந்து விலக்கி தனியே வைத்துப் பார்த்தால் புரியும். புரியாவிட்டால் அன்னை தீர்ப்பார்.*
- *நாமே பிரச்சனையானால், அன்னையிடம் கூறத் தோன்றாது. கூறினாலும் பிரச்சனைத் தீராது.*
- *பல சமயம் பிரச்சனையை நாமே உற்பத்தி செய்வோம். அதை நாம் அறிவதில்லை, பிரித்துப் பார்த்தால் புரியும்.*
- *கல்லூரி பிரின்ஸ்பால் ஒரு மகன், ஒரு பெண் வைத்திருப்பவர். அவர் என் மகனுக்குத் திருமணம் செய்ய என்னிடம் பணமில்லை என்றால் அதை நாம் கேட்டுக் கொள்ள வேண்டியதில்லை.*
- *என் கணவனை நான் திட்டுவேன், குறை கூறுவேன், ஒரு சில சமயம் அடிப்பதும் உண்டு. அன்னை எங்களுக்குள் சுமுகம் ஏற்படுத்த வேண்டும்! என்பது பிரச்சனை.*
- *பிரச்சனையை நம்மை விட்டுப் பிரித்தபின் சமர்ப்பணம் செய்தால் - நம்மால் பிரச்சனை வளராததால் - அருள் உடனே செயல்படும். பிரியாத நிலையில் நம் சக்தி பிரச்சனையை அடைந்து அதை வலுப்படுத்தும். வாலிக்கு எதிரியின் பலம் வரும் தத்துவம் அது.*

(தொடரும்)

## ஜீவிய மணி

*தம் பெருமையைத் தாமே நினைந்து மகிழ்ந்து பூரித்து பூரணம் பெறுவது சின்ன புத்தி. பூரணம் பெற்றது பொல பொல என உதிர்ந்து பெருமையைச் சிறுமையாக்கிச் சிறுமை அடக்கமானபின் சின்ன புத்தி பெரிய புத்தியாகும்.*

# ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. M. ஜகந்நாதன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: 06.09.2015

6. **துன்பம் எவ்வளவு இறுதி இன்பத்திற்கு அவசியம், தோல்வி எவ்வளவு இறுதி வெற்றிக்கு அவசியம் என்பதைப் புரிந்து கொண்டால், ஆண்டவன் செயல்படும் வகை ஓரளவுக்குப் புரியும்.**

திருமணமாகாத பெண்ணுக்கு திருமணம் அவசியம் என நாம் நினைப்பது தவறல்ல. அவள் வீட்டு நிலைமையில் அவள் மனம் எப்படியிருக்கிறது, எதைத் தேடுகிறது, *எதன் மூலம் தேடுகிறது, ஆண்டவன் அவளுக்கு என்ன அளிக்கிறான் என்பது நமக்குத் தெரிவதில்லை.* கிருஷ்ணதன் கோஷ் தன் மகனுக்கு ICS வேண்டும் என நினைத்தார். பகவான் ஸ்ரீ அரவிந்தர் மனத்தில் காவியமிருந்தது. அது பிரபஞ்ச காவியம். மந்திரத்தின் மூலம் அறிய வேண்டும் என்பது அன்று அவருக்கோ அவரையறிந்தவர்க்கோ தெரியாது. வேலை செய்பவளுக்குச் சாப்பாடு வேண்டும் என அவளுக்கும், மற்றவர்க்கும் தெரியும். *அவள் உடலில் என்ன வியாதியிருக்கிறது, அது சரியாக அவள் பட்டினியுடன் வேலை செய்ய வேண்டும் என அவளுக்கோ அவளைக் கண்டு பரிதாபப்படுவர்க்கோ தெரியாது.* மனிதனுடைய பார்வை கண்பார்வை. கண் பார்க்கும், கண் பார்த்ததை மனம் புரிந்து கொள்ளும். புரிந்து கொள்ள மேலும் ஒரு நிலையுண்டு. அது ஆத்மா. B.A. பரீட்சை எழுத விரும்பும் தமிழ் பண்டிட் விரும்புவது B.A. எனத் தெரிகிறது. 20 வருஷமாக ரிஜிஸ்டரில் பியூனுக்கு முன் எழுதப்பட்ட அவர் பெயர் அங்கிருந்து உயர வேண்டும் என அவர் நினைப்பதை மற்றவர் அறிவதில்லை. தன் படிப்பில் பாதியும் பெறாத இதர ஆசிரியர்கட்கு ஆங்கில அறிவால் ஏற்படும் மரியாதையை அவர் விரும்புவதை எவரும் அறிவதில்லை. *அதையும் கடந்த சட்டங்கள் உண்டு*, மனிதன் வசதி தேடுவது உண்மை. அதையும் கடந்து தேடுவது மரியாதை. *மரியாதையைத் தேடுவது உணர்ச்சி.* உடல் அதைக் கடந்தது. உடல் தேடுவது வலிமை. வலிமை அதிகாரத்தைக் காட்டும். பிறரை அழிக்கும் வலிமையுள்ள அதிகாரம் தேடுவது மனித உறவு. *அடுத்தவரை அழிக்க முடியாவிட்டால், உதவி செய்பவர், உறவாடுபவரை, இவனுக்கு வேலை போய் நடுத்தெருவில் நிற்க வேண்டும், என்னை வந்து கெஞ்ச வேண்டும் என மனித மனம் நினைக்கிறது* என்பதை சொல்ல முடியாது. சொன்னால் எவரும் கேட்டுக் கொள்ள மாட்டார்கள். இந்த அம்சத்தைத் தன் மகனிடம், பெற்றோரிடம், உற்ற நண்பரிடம் கண்டவர்க்கு உலகத்து மேல் வெறுப்பு எழும். அந்த வெறுப்பு எழாதவர் நாகரிகமானவர். மனம் நயத்தக்க நாகரிகம் தேடினால் நண்பர் விஷம் பரிமாறுவார் என்பது குறள். வயது 60-க்கு மேலானால், அனுபவம் 100 அல்லது 200 ஆனால் சற்று கவனமாகச் சிந்தித்தால் இத்தனையும் பாரதத்திலிருப்பதைக் காணலாம். *அதைக் காண நுணுக்கம் தேவை.* வாழ்வில் யோகம் என்பது இதனையும் கண்டபின் நாகரிகமாக, நயமான பண்புடன் நடப்பது. ஆண்டவன் செயல், திருவுள்ளம் என்பது என்ன என்று தெரியும் மார்க்கம் இவை. கால் இடுப்பு வரை அளவுகடந்து வீங்கியபின் வீக்கம் வடியும் மருந்தில்லை. அப்படியொரு மருந்து இருந்து வைத்தியம் செய்து குணமாக பெருவசதி தேவை. வசதியுள்ளவர்க்கு அது வாராது. பட்டினி கிடப்பவருக்கே அது வரும். *அன்பருக்கு, அன்னை சூழலிலிருப்பவர்க்கு எதற்கும் வழியுண்டு.* இருக்கும் வழி மூலம் அன்னை சிரமத்தைத் தீர்ப்பதை உலகம் துன்பம் என அறிவது மக்களுடைய அறியாமை. நாள் முழுவதும் கடுமையாக உழைத்தவனுக்கு மது மாலையில் இதமாக உறக்கம் தருகிறது. இதில் அவசியம் உண்டு, தவறு இல்லை. பகவான் கனவில் சன்னியாசி சூலம் கொடுத்த பின்னும் பகவான் ICS-ஐ விட்ட பின்னும் அவர் மனம் சுதந்திரத்தை நாடியது. *சுதந்திர நாட்டம் பெற வேண்டிய துன்பம், அவதார புருஷன் என்பதால், பிரபஞ்ச இருளை அழித்து விஸ்வரூப தரிசனத்தில் தீமையற்ற நன்மையைக் காட்டியது.* காளிங்க நர்த்தனம், சிசுபாலனைக் கொன்றது, கம்ச வதம், துரியோதனாதிகள் பூண்டோடு அழிந்தது ஆகியவை துன்பமாகத்

தெரிந்தால் சத்திய ஜீவிய திருஷ்டியில் அவை புனிதமான இன்பமாகத் தெரியும். நம்மால் அவற்றில் ஒன்றையாவது நம் அனுபவங்களில் காண முடியும். அது “திரிகால திருஷ்டி”. போர் முனையில் நிகழும் செயல்கள், ஊர் திரண்டு உற்றாரை அழிப்பவை தெய்வச் செயல் என அறிய நம் பார்வை சத்திய ஜீவிய திருஷ்டி, *திரிகால திருஷ்டியாக* வேண்டும். தத்துவத்தை விளக்கினால் அது தர்க்கமாக இருக்காது. குதர்க்கமாக இருக்கும். பொறுமை அஞ்ஞானத்தை ஞானமாக மாற்றும். மனிதன் செடல் குத்திக் கொள்கிறான். தீ மிதிக்கிறான். பூரி ஜகன்நாத்தில் தேரடியில் வீழ்ந்து மடிகிறான். இவை அவன் தேடும் இன்பம் என்பது ஆன்மிக ஞானம். ஆவீன மழை பொழிய அகத்தினள் மெய் நோவ சாவோலை கொண்டு ஒருவன் எதிரே வருவதைத் தமிழ்ச் செய்யுள் கூறுகிறது. இவை, *பெருவெற்றியை நாடும் எலக்ஷனுக்கு முன் இரவு பகலாய் வேலை செய்பவர், மேதை எனப் பட்டம் பெறுபவன் இரவு பகலாய்ப் படிப்பது என அறிய அனுபவம் ஆன்மிகமாக ஏற்க வேண்டும்.* 27-ஐ தேடிப் பெறாதவர் 81 பெற்றபின் முதலாக நினைப்பது “போதும் போதும், இனிமேல் வேண்டாம்” எனக் கருதி அதைப் பெற்றுத் தருபவரைத் திட்டுவார் என்பது ஆன்மிக விவேகம். சத்பிரேமுக்கு உள்ள அம்சம் அன்னை கண்ணில் பட்டு, அதை பகவான் ஆமோதித்து, 20 ஆண்டு அன்னை முயற்சியால் அவர் **Sri Aurobindo or The Adventure of Consciousness** எழுதியபொழுது அவர் உடல் எரிய ஆரம்பித்தது. அது உடலின் ஏற்புத்திறன் ஒருவர் தேடுவது என்பது அவருக்கே தெரியாத பொழுது அடுத்தவர்க்கு எப்படித் தெரியும்? என் பக்தியால், என் தாயார் செய்ய மறுத்ததை நான் பெற வேண்டும் எனப் பெண் நினைப்பது அவளுக்கோ பிறருக்கோ தெரியாது. எவனாவது என் கையில் மாட்டினால் அவனை அழித்துச் சமாதி கட்டி மறு வேலை பார்க்கிறேன் என்பவர் அதையறியாமல், அறிந்தால் வெளியிட முடியாமல் **B.A.** படிக்க முனைவது உலகம் காணும் நிகழ்ச்சி. “எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்” என்பவன் குருவுக்கு ஞானம் தர வந்த சிஷ்யன். “தோற்றேன் என்றபொழுது வென்றேன்” என்பது ஞானம். ஒருவருக்கு இந்த ஞானம்



வந்தபின் அவரால் இந்த ஞானம் செயலில் பொறுமையாக வெளிப்படுமாறு இருக்க முடியுமானால், அவர் பார்வை, அவர் சூழல் அன்னையின் ஆன்மிகச் சூழல். அதில் பிரச்சனை தடம் மாறி திருவுருமாறி ஆன்மிக வாய்ப்பாகும். மீரா பெற்ற விஷம் அவள் பெற்ற மோட்சம். சீராளனைக் கறி சமைத்ததால் தாயார், தந்தை, மகனுக்கு மோட்சம் கிடைத்தது. அது இறைவன் திருவுள்ளம். *அன்பர் சொந்த வாழ்வில் அரெஸ்ட் வாரண்ட் பெற்று, அரசியல் செல்வாக்கடைந்து, அகில இந்தியாவில் தொழில் நடத்தினார் என்பது ஓர் அன்பர் அனுபவம்.*

(தொடரும்)

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உலகில் விரயமில்லை என்பது பெரும் கருத்து. உலகம் அறியாதது. எப்பொழுது விரயமில்லாமலிருக்கும்? விரயமின்றி ஷர்ட் தைக்க முடியாது. எந்தக் காரியத்தை உதாரணமாக மேஜை செய்வதை விரயமின்றி செய்ய முடியுமா? மேஜைக்கு பெயிண்ட் அடிப்பதை தத்துவப்படி சிந்தாமல் சிதறாமல் அடிக்கலாம். நடைமுறையில் அது நடக்காது. சிலையை விரயமின்றி செய்ய முடியாது. சாப்பிட்டது ஜீரணமானபின் மீதி கழிவு. விரயமில்லாமல் சாப்பிட முடியாது. ஒரு பெயிண்டர் விரயமின்றி பெயிண்ட் செய்ய பிரஷ்ஷில் பெயிண்ட் அளவோடு எடுக்க வேண்டும். பிரஷ்ஷிலிருந்து பெயிண்ட் சிந்தக்கூடாது. பெயிண்ட் செய்யும்பொழுது சிந்தக்கூடாது. இது நடைமுறையில் சாத்தியமில்லை. அது முடியும் எனக் கொண்டால் அந்தப் பெயிண்டருக்கு மனம் பெயிண்ட், பிரஷ், பெயிண்ட் அடிப்பது போன்ற எல்லாச் செயலிலும் தெளிவாக **(conscious)** இருக்க வேண்டும். சிருஷ்டியில் விரயமின்றியிருக்க பிரம்மம் சிருஷ்டிக்கு வெளியே தெளிவாக **(conscious)** இருக்க வேண்டும். பிரம்மம் **conscious**-ஆக இருக்க வேண்டுமானால் அது அக்ஷர பிரம்மமாக இருக்க முடியாது. ஏனெனில் அக்ஷர பிரம்மம் அசையாதது, வளராதது. அதனால் மரபின் கூற்றை நாம் ஏற்க முடியாது.

**பிரம்மம் உயர்ந்து அக்ஷர பிரம்மம், க்ஷர பிரம்மம்**
**இரண்டும் இணைந்து முழு பிரம்மமாக வேண்டும்**
**என்று பகவான் கூறுவதை ஏற்க வேண்டும்.**

# The Life Divine – Outline

## தமிழ்

(சென்ற இதழின் தொடர்ச்சி) கர்மயோகி

### BOOK II

### ஞானமும் அஞ்ஞானமும் - ஆன்மிகப் பரிணாமம்

### Part 1

### அனந்த ஜீவியமும் அஞ்ஞானமும்

பகவானுடைய தத்துவம் இறைவன் உலகமானான் என்பது. இறைவன் ஞானம், உலகம் அஞ்ஞானம். மீண்டும் அஞ்ஞானம் ஞானமாவது ஆன்மிகப் பரிணாமம். மரபு ஆன்மாவை மனிதக் கரணங்களாகிய உடல், உயிர், மனம் இவற்றுள் தலையாயது எனக் கருதியது. *ரிஷிகள் கண்டது: அற்புதமான ஆத்மா சிறைப்பட்டுள்ளது. இதற்கு விடுதலை வேண்டும் எனக் கருதி தவம், யோகம் மூலம் ஆன்மாவுக்கு விடுதலை அளித்து ஆன்மா அதன் பிறப்பிடமான பிரம்மத்தைச் சேரும் வகை செய்தனர்.* அவர்கள் கருவி மனம், பகுத்து மட்டும் அறிவது. மனம் ஆன்மாவை ஜீவனிலிருந்து பிரித்துப் பார்த்து எடுத்த முடிவு மரபில் கண்ட ஆன்மிக உண்மை.

பகவானுடைய கருவி சத்திய ஜீவியம். இதற்கு முழுமை தெரியும். ஆன்மாவைச் சத்திய ஜீவியம் மனித ஜீவனின் ஒரு பகுதியாகக் காணவில்லை. மனித ஜீவன் முழுவதும் ஆன்மா எனக் கண்டது. மேலும் உலகமே ஆன்மா எனவும் அதற்குப் புரிந்தது. தொடர்ந்த பார்வையால் சிருஷ்டி முழுவதும் - பிரபஞ்சம், அதற்கு மேலுள்ள பிரம்மம், அதன் கீழுள்ள உலகம் - ஆன்மா எனத் தெளிந்தது.

*பகவானுக்கு ஆன்மா சிருஷ்டியின் சத்தியம் என்று தெரிந்தது.*

பிரம்மம் பிரம்மமான நிலையிலிருந்து அசைந்து சிருஷ்டிக்க ஆரம்பித்தவுடன் *சிருஷ்டியில் பிரம்மம் தன்னை ஆன்மாவாகக் கண்டது.*

இந்த ஆன்மா சிருஷ்டியின் முதற்கட்டத்தில் சச்சிதானந்தமாயிற்று. பிரம்மம் அகம், புறம் எனப் பிரிந்தபொழுது புறம் சிருஷ்டியாயிற்று. அந்நிலை சச்சிதானந்தம். மீண்டும் சச்சிதானந்தம் அகம், புறம் எனப் பிரிவதால் புறம் சத்திய ஜீவியமாயிற்று. சத்திய ஜீவியம் மீண்டும் அகம் புறம் எனப் பிரிந்து அவற்றிடையே மனம் உற்பத்தியாயிற்று. மனம் வாழ்வு, ஜடத்தை உற்பத்தி செய்தது.

***சிருஷ்டிக்குரிய முறை - அகம் புறம் எனப் பிரிதல்.***

சிருஷ்டி மனத்தோடு முடிகிறது.

வாழ்வும், ஜடமும் மனத்தால் சிருஷ்டிக்கப்பட்டாலும், அவை சிருஷ்டியில் சேரா. மனமே சிருஷ்டிக்கு கடைசிக் கட்டம். இவையெல்லாம் மரபு அறிந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் மனம் உள்பட வாழ்வும் ஜடமும் விலக்கப்பட வேண்டியவை என்றனர்.

சிருஷ்டியில் அஞ்ஞானமில்லை. அஞ்ஞானத்தை மனமே உற்பத்தி செய்கிறது. மனம் வாழ்வையும், ஜடத்தையும் உற்பத்தி செய்தாலும் மனத்தின் அஞ்ஞானம் மனம், வாழ்வு, உடலைப் பாதிப்பதில்லை. அஞ்ஞானம் சிருஷ்டிக்கு அற்புதமான திறமையைத் தருகிறது. அதாவது அஞ்ஞானத்தை எந்த நேரத்திலும் விலக்கலாம். அஞ்ஞானத்துள் ஒளிந்துள்ள ஞானம் வெளிவருவதாலும் ஞானத்திலிருந்து ஆன்மா வெளிவருவதாலும், பிரம்மத்திலிருந்து சிருஷ்டியின் சத்தியமாக எழுந்த ஆன்மா பரிணாம வளர்ச்சி பெறுகிறது. எனவே,

**பூரணயோகம் ஆன்மிகப் பரிணாம யோகம் எனப் பெயர் பெற்றது.**

மரபுக்கு ஆன்மா ஆதி, அந்தம், அசைவு, வளர்ச்சி, மாறுதலற்றது. பகவானுக்கு ஆன்மா பரிணாம வளர்ச்சி பெறுவது. பரிணாம வளர்ச்சியில் ஆன்மா முழுவதும் - பிரபஞ்சத்தில் பரவிய ஆன்மா முழுவதும் - பெறும் ஆனந்தம் பேரானந்தம். வளர்ச்சி ஆனந்தம் தரும். பெரும் வளர்ச்சி பேரானந்தம் தரும்.

*பகவானுடைய யோகத்தில் மனிதன் ஆன்மாவாகி, பிரபஞ்சம், அதைக் கடந்த பிரம்மத்திலும் வியாபித்து தான் பெறும் பரிணாம வளர்ச்சியால் வளரும் ஆனந்தம் பெறுவதை சத்திய ஜீவனான மனிதன் அனுபவிக்கிறான்.*

**அப்பேரானந்தப் பெருவெள்ளம் என்ற பேற்றை நாடி பிரம்மம் சிருஷ்டித்தது.**

இப்பகுதிக்குரியவை 14 அத்தியாயங்கள். ஞானம் அஞ்ஞானத்திலிருந்து வெளிவருகிறது. அந்த அஞ்ஞானம் மேல் மனத்தில் முழுமை பெறுகிறது என்றார். அஞ்ஞானம் முழுமை பெற ஒரு குறுகிய எல்லைக்குள் அதை அடைக்க வேண்டி மேல் மனத்தை அடி மனத்திலிருந்து பிரித்து வரையறை ஏற்படுத்தப்பட்டது. மேல் மனம் என்பது அகந்தை, காலம், மனம், சிறியது ஆகியவை செயல்படுமிடம். இது ஜடமான மனம் (13) அடிமனம் முழுமனம். மேல் மனம் அதனின்று பிரிக்கப்பட்டதுடன் திருப்பி அமைக்கப்பட்டதால் **(reverse)** மீண்டும் அடி மனத்துடன் சேர்வது இயலாது. முழுமை பெற்ற அஞ்ஞானம் ஞானத்தைவிடப் பெரியது என்கிறார் பகவான். பிரம்மம் **(self)** காலத்துள் வீரமாக செயல்பட வேண்டி **(adventure in Time)** மேல் மனம் உற்பத்தியாயிற்று என்பது தத்துவம். முழுமை பெற்ற அஞ்ஞானம் இருளால் பூரணம் பெற்று தீமை **(evil)** உற்பத்தியாயிற்று (14). தீமை பரிணாமத்தால் அஞ்ஞானமாயிற்று. சத்திய ஜீவியத்திலிருந்து மனம் பிரிந்ததால் (12) அஞ்ஞானம் எழுந்தது. இவ்வஞ்ஞானம் 7 வகையானது (11). அஞ்ஞானத்தைப் பூரணமாக அறிய ஞானத்தை அறிய வேண்டும் (10). ஞானம் நால்வகை (9). ஞானம் தன்னை அஞ்ஞானமாக மாற்றிக் கொண்டது (7). மேல் மனம் அகந்தை செயல்படுமிடம். *அஞ்ஞானம் சுய ஜீவியத்தில் சுய அனுபவம் பெற்றால் அகந்தையாகிறது* (8,9). அஞ்ஞானம், ஞானத்தைப் பற்றிக் கூறுமுன் பகவான் சங்கரருக்குரிய பதிலை 5, 6 அத்தியாயங்களில் எழுதுகிறார். சங்கரர் உலகம் மாயை என்றார். பகவான் அஞ்ஞானத்தை சங்கரர் மாயை என விவரிக்கிறார் என்ற விளக்கம் தருகிறார்.

இரண்டாம் அத்தியாயம் இப்பகுதிக்கு முக்கியமானது. அங்குப் பரம்பரை பிரம்மம், புருஷா, ஈஸ்வரனைப் பிரித்து அறிகிறது எனவும் அவை ஒன்றே எனவும் கூறுகிறார். பிரித்து அறிவது அஞ்ஞானம். சேர்த்துப் பார்ப்பது ஞானம். மேலும் மரபு



காலம், காலத்தைக் கடந்த நிலையை அறியும். பகவான் அந்த லோகங்கள் அஞ்ஞானத்திற்குரியவை என்கிறார். ஞானத்திற்குரிய காலம் மூன்றாம் நிலைக் காலம். இங்கு காலமும், கடந்ததும் இணைந்து செயல்படுவதால் செயல்கள் க்ஷணத்தில் பூர்த்தியாகின்றன என்கிறார்.

முதல் அத்தியாயம் பிரம்ம சிருஷ்டி பிரபஞ்ச சிருஷ்டி என்பது. இங்கு தன் மிகப் பெரிய கொள்கையை வெளியிடுகிறார். இறைவன் உலகைப் படைக்கவில்லை, இறைவனே உலக-மானார் எனக் கூறுகிறார். அத்துடன் பிரம்மா சிருஷ்டிக்கவில்லை எனக் கூறி உலகை சத்திய ஜீவியம் சிருஷ்டித்தது எனக் கூறுகிறார்.

மூன்றாம் அத்தியாயம் பரமாத்மாவும் ஜீவாத்மாவும். மரபு பல்லாயிரம் ஜீவாத்மாக்களுண்டு, ஜீவாத்ம சித்தி பரமாத்ம சித்திக்கு வழிகோலும், அந்த சித்தியில் ஜீவாத்மா பரமாத்மாவில் கரைந்து விடுகிறது என்கின்றது. பகவான் பிரபஞ்சத்திலுள்ள ஒரே ஜீவாத்மா, நாம் - மனம், அதை ஆயிரமாயிரம் ஜீவாத்மாக்-களாகக் காண்கிறோம், அத்துடன் ஜீவாத்ம சித்தி ஜீவாத்மாவுக்கு பரமாத்மாவை எட்டித் தானே பரமாத்மாவாகும் நிலையைத் தருகிறது, ஜீவாத்மாவுக்கு அழிவில்லை, மேலும், பரமாத்ம நிலையையும் கடந்து ஜீவாத்மா பிரம்மத்திற்குரிய ஆத்மாவாகவும் மாறுகிறது என்கிறார்.

4-ஆம் அத்தியாயம் இறைவனும் எதிரான உலகமும். பகவான் அனைத்துமே இறைவன், அவனுக்கு எதிரானது உலகிலில்லை, எதிராக இருப்பது தோற்றம், எதிரான தோற்றத்தை ஏற்று மலர்ந்தால் இறைவனின் பூரண ஜீவனை அறிய முடியும், சச்சிதானந்தமே முடிவில்லை, சச்சிதானந்தமும் அதற்கு எதிரானதும் இணைந்து உயர்ந்து எழுந்து முழு பிரம்மமாவதை நாம் எதிரானது எனத் தவறாக நினைக்கிறோம் என்கிறார்.

(தொடரும்)

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

5 குழந்தைகளுக்குத் தாயானவள், 6-ஆம் குழந்தைப் பிரசவத்திற்குத் தாய் வீட்டிற்கு வந்திருந்தபொழுது, கணவனுக்குப் பிரமோஷன் வந்தது. அத்துடன் அவனுடைய பெற்றோர்களுக்கு, அவனுக்கு இரண்டாம் திருமணம் செய்தால், புதிய உத்தியோகத்தால், அதிக சீர்வரிசைகள் கிடைக்கும் என்ற எண்ணமும் உற்பத்தி ஆயிற்று. கணவனும் சம்மதப்பட்டு, பெண் பார்க்கப் புறப்பட்டுவிட்டார். இந்நிலை மனைவிக்குப் புதியதில்லை. திருமண நிச்சயதார்த்தத்தில் இருந்து குதர்க்கமான செயல்களுக்குப் பலியானவளானதால், கணவன் போக்கு நிரந்தரமாகத் திகிலையும், ஆபத்தையும் உற்பத்தி செய்துவிட்டதை உணர்ந்தாள். இந்நிலையில் அன்னையை வழிபட்டால், அன்னை இருப்பதை அதிகமாக்கிக் கொடுப்பார்கள். அவர்களை வழிபட ஆரம்பித்த பின்னர் கணவனால் தொந்தரவு கொடுக்க முடியாது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால், இருக்கும் வசதிகளை அதிகமாக்கும் அன்னை, குறைக்க முடியாதன்றோ? என்ற கருத்து பெண்மணியின் மனதைத் தொட்டது; நம்பிக்கை பிறந்தது; திகிலும், கவலையும் ஒழிந்தன. கணவர் திரும்பி வந்தார். கொஞ்ச நாள் கழித்துத் தாமும் அன்னை பக்தரானார். அதிலிருந்து 25 வருஷ காலம் அவர் உயிரோடிருந்தவரை, மனைவிக்கு அது போன்ற தொந்தரவைக் கொடுக்கவில்லை; வேறெந்தத் தொந்தரவையும் கொடுக்கவில்லை. இந்த மாற்றத்திற்கு வித்து அப்பெண்மணிக்கு ஏற்பட்ட நம்பிக்கை; அந்த நம்பிக்கையிலிருந்த உண்மை. நம்பிக்கை கவலையை அழிக்கும்; நிம்மதியைக் கொடுக்கும். “எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அதனால் நிம்மதி வந்துவிட்டது” என்று அவளால் சொல்ல முடிந்தது.



1929-இல் உலகப் பொருளாதார நெருக்கடி நியூயார்க்கிலும், லண்டனிலும் ஆரம்பித்து, உலகம் பூராவும் பரவி, 1939-இல் உலக யுத்தம் வரும்வரை வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம், பட்டினியை அமெரிக்காவிலிருந்து எல்லா நாடுகளிலும் ஏற்படுத்தியது. அப்பொழுது பாங்கில் டெபாசிட் போட்டவர்கள், பாங்கை நம்பாமல் பணத்தை எடுக்க ஆரம்பித்தனர். ஓரிரு பேங்க் திவாலானவுடன் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் பணத்தை பேங்கிலிருந்து வாபஸ் செய்தார்கள். தினமும் 10, 20 நூறு பாங்குகள் திவாலாகிக்கொண்டிருந்தன. அமெரிக்க ஜனாதிபதி ஹூவர் மக்களை, “அப்படிச் செய்தால் நாடு திவாலாகிவிடும்” என்று கேட்டுக்கொண்டார். மக்கள் அதைப் புறக்கணித்தனர். 1929-லிருந்து 1932 வரை இந்த நிலை நீடித்தது. ரூஸ்வெல்ட் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நிலைமை மேலும் மோசமான நேரம். தொடர்ந்து மக்கள் பணத்தை வாபஸ் செய்தால் நாடு திவாலாகும். பாங்கில் உள்ள பணத்தை எடுக்காவிட்டால் பாங்க் திவாலானபின் எல்லாப் பணமும் போய்விடும். அந்த நிலையில் பணம் போட்டவர்களை எப்படி ‘எடுக்காதே’ என்று சொல்ல முடியும்? ரூஸ்வெல்ட் தினமும் ரேடியோவில் மக்களிடம் பேசினார். நாட்டின் நிலையை விளக்கினார். பாங்கைப் பற்றியும், மக்களுடைய பணத்தைப் பற்றியும் பேசுமுன் நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி மக்கள் அறிந்திராத உண்மையை எடுத்து விளக்கினார். “ஒரு நாட்டின் செல்வம் அந்த நாட்டு நிலங்களிலும், தொழிற்சாலைகளிலும் மனித உழைப்பால் ஏற்படுகிறது. இதுவரை அமெரிக்கா செல்வர் நாடாக விளங்கியது, நம் நாட்டு விவசாயிகளாலும், தொழிலாளிகளாலுமன்றோ? இன்று அந்த நிலங்கள், தொழிற்சாலைகள், அங்கு வேலை செய்தவர்கள் எல்லாம் இருக்கிறார்களா? அல்லது மறைந்து விட்டார்களா? எல்லாம் அப்படியே இருக்கின்றன. அவையிருக்கும் பொழுது பொருளாதாரத்திற்கு நெருக்கடி எப்படி வரும்? நிலமும், தொழிலும், மனிதனும் இருக்கும்வரை நெருக்கடிக்கிடமில்லை. அவற்றைத் தாண்டி எழும் பிரச்சனைகள் அரசுக்குக் கட்டுப்பட்டவை” என்ற விளக்கம் கொடுத்தார். கேட்ட இலட்சக்கணக்கானவர்களுக்கு

மனதிலிருந்த குழப்பம் நீங்கியது; தெம்பு வந்தது. அதையுணர்ந்த ரூஸ்வெல்ட் “நீங்களெல்லாம் எடுத்த பணத்தை மீண்டும் பாங்கில் போட வேண்டும்” என்றார். மறுநாள் வரிசை வரிசையாகப் பாங்கில் மக்கள் திரண்டு எடுத்த பணத்தை மீண்டும் டெபாசிட் செய்தனர். அதன்பின் பாங்குகள் திவாலாகவில்லை. இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி. மக்கள் மனதிலுள்ள அறியாமையையும், குழப்பத்தையும் நீக்கியவுடன் அவர்களுக்குத் தெம்பு வந்தது. நாடு திவாலாகப்போவதைத் தடுக்க முடிந்தது.

ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்கும் உற்சாகத்தில், அதை லட்சியமாய் நடத்த வேண்டுமென்ற ஆர்வத்தில், தலைவருக்குச் சிறப்பான இடமளிக்க விரும்பி, அதுபோன்ற ஸ்தாபனங்களில் இல்லாத ஒன்றைத் தலைவருக்குக் கொடுக்க விரும்பி, எல்லாவித உரிமைகளையும் அவருக்கே அளித்து, சட்டதிட்டங்களை இயற்றினார்கள். அதற்கமைந்த தலைவர் சாதாரண மனிதனுக்கு உள்ள நல்ல குணங்கள்கூட இல்லாதவர். ஸ்தாபனம் பெரும்புகழ் பெற்றது. எந்தப் பிரச்சனையும் இல்லை. பெருஞ்சொத்து ஏற்பட்டது. தலைவருக்கே உண்டான குதர்க்கபுத்தி செயல்பட ஆரம்பித்தது. ஸ்தாபனத்தை உடைத்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அனைவரும் ஸ்தாபனத்தின்மீது உயிரையே வைத்திருந்தனர். தலைவருடைய போக்கு விபரீதமாக இருந்தது. அனைவரும் அவரிடம் சென்று, “நாங்களெல்லாம் விலகிக் கொள்கிறோம். மற்றவர்களை நீங்களே நியமித்து, ஸ்தாபனத்தைத் தொடர்ந்து நடத்துங்கள்” என்றார்கள். தலைவர் மறுத்தார். “ஸ்தாபனத்தைக் கலைத்து வேடிக்கைப் பார்க்கப்போகிறேன். எனக்கு அந்த அதிகாரம் உண்டு. என்ன செய்ய முடியும்?” என்று சில்லறை மனிதனாகப் பேசினார். மற்ற அங்கத்தினர்கள் ஸ்தாபனத்தைக் கட்டி வளர்த்தவர்கள். சர்வபரித்தியாகம் செய்தவர்கள். தங்கள் முழுச் சொத்தையும், உழைப்பையும் கொடுத்தவர்கள்; அவர்கள் விலகிக் கொள்ளத் தயார். ஸ்தாபனம் உடைவதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வக்கீலைக் கலந்தார்கள். “உங்கள் ஸ்தாபனம் சட்டத்திற்கு அப்பாற்பட்டது. இதுபோன்ற



அதிகாரத்தை எந்த ஸ்தாபனமும் தலைவருக்குக் கொடுத்ததில்லை. நீங்களே அப்படிச் செய்தபின் சட்டம் எப்படி உதவும்” என்றார். அனைவரும் வீடு திரும்பினர். மனம் உடைந்தனர். முக்கிய ஊழியர் மட்டும் நம்பிக்கை இழக்கவில்லை. “நான் முழுமனதுடன் செய்தேன். நல்லெண்ணத்துடன் இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்தேன். அந்த நல்லெண்ணத்திற்கு அடையாளமாகவே முழு அதிகாரத்தையும் தலைவருக்குக் கொடுத்தேன். அதனால் தவறு வாராது. என் எண்ணம் சட்டத்தைவிட உயர்ந்தது. சட்டம் உதவாவிட்டால் வேறு வழியிருக்கும்” என்று மற்றவர்களிடம் சொல்லிவிட்டு, மறுபடியும் வக்கீலைப் பார்த்து, “தலைவர் அவர் போக்கில் சென்றால், சட்டப்படி மற்றவர்களுடைய பங்கை நிறைவேற்ற நாங்கள் தயார்” என்று கூற வக்கீலைப் பார்த்தார். விவாதத்தைக் கூட இருந்து கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு வக்கீல், “தலைவருக்கு ஏகபோக அதிகாரத்தை நீங்கள் தானே கொடுத்தீர்கள். கமிட்டி முழுவதும் இங்கே இருக்கிறீர்களே, கொடுத்த அதிகாரத்தை வாபஸ் செய்ய உரிமை, கமிட்டிக்கு உண்டு” என்று விளக்கினார். ஊழியர்களுக்குச் சட்டம் கைகொடுத்தது. தலைவர் தாமே விலகிப் போய்விட்டார்.

நம் மனத்தில் கோணலில்லாவிட்டால் மற்றெந்தக் குறையையும் விலக்க ஒரு மார்க்கம் கண்டுபிடிக்கலாம்; விலக்கலாம். அதன் வழியே சிக்கல் அவிழும். நம் மனத்தில் கோணல் இருந்தால், அதை நாமே விலக்கிக்கொள்ள வேண்டும். மற்றவர்களால் விலக்க முடியாதது அது. கோணல் இல்லையென்றால், குறையை நிவர்த்தித்து, பின்னர் செய்யும் பிரார்த்தனை முழுவதும் பலிக்கும். பிரச்சனை தீர்வதற்கு முன் கவலை நீங்கி, மனம் நிம்மதியடையும். அந்த நிம்மதியே பிரச்சனையைத் தீர்க்கவும் உதவும்.

(தொடரும்)

**ஜீவிய மணி**

*ஆசையழிந்த நிலையில் ஆண்டவன் தரிசனம் தருகிறான்.*

# நெஞ்சுக்குரிய நினைவுகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## Synthesis of Yoga
## Part IV Chapter 1, Principle of Integral Yoga (P. 586)

[நிஷ்டை - **concentration** - என்பது ஒரு வழியில் தீவிரமாவது. சமர்ப்பணம் என்பது எல்லா வழிகளிலும் முனைந்து முழுமை பெறுவது என்பதால் சமர்ப்பணத்திற்கே பகவான் கூறும் முழுமையான அம்சம் உண்டு. வேலை என்பது ஒன்றுதான். அது உள்ளே போவது. உள்ளே போய் சமர்ப்பணம் செய்வது. புலன்களைக் கடப்பது. மனதைக் கடப்பது. ஆத்மாவை அடைவது என்பவை இம்முறைகளின் மூலத்தை உட்கொண்டன. புலன்களைக் கடப்பது புறத்தில் இடத்தைக் (Space) கடப்பது. அது ஓடும் எண்ணம் நிற்பது. எண்ணமே நிற்பது காலத்தைக் கடப்பது. காலம், இடத்தைக் கடப்பது மனத்தைக் கடப்பது. மனத்தைக் கடப்பது ஆன்மாவை அடைவது.]

1. இதை வாழ்வில் மேற்கொள்ள பல விஷயங்கள் உண்டு. (உ-ம்)
    1. மணிக்கொரு முறை செய்யும் சமர்ப்பணம்.
    2. 1 மணி நேரம் சோதனையாக சமர்ப்பணத்தை முழுமையாக்குவது.
    3. முழுமையான சமர்ப்பணத்தின் நிலைகள், சிரமங்கள், வாய்ப்புகள், அதன் உள்ளுறை முக்கியத்துவம் போன்றவை.
    4. எண்ணத்தை அடிப்படையில் நல்லெண்ணமாக மாற்ற முடியுமா? அது எப்பொழுது அவசியமாகிறது?
    5. எண்ணத்திற்கும் உணர்ச்சிக்கும் உள்ள வித்தியாசம்.
    6. இதயத்தின் உணர்ச்சி (emotion, feeling) உடல் உணர்ச்சி (sensation) க்குள்ள வித்தியாசம், யோகத்தில் அவற்றின் பங்கு.
    7. சமர்ப்பணத்தின் சிறப்பை அறியும் நேரம்.
    8. சமர்ப்பணம் தவறுமா? எப்பொழுது? ஏன்? அதன் பொருள் என்ன? *தவறுவதை எப்படிச் சமர்ப்பணம் செய்வது?* தவறுதலால் யோகத்தில் சமர்ப்பணம் எப்படிப் பெரிய கருவியாகிறது?
    9. மௌனத்தின் நிலைகள் - மௌனம்; மௌனத்தின் பின்னுள்ள மௌனம்; எண்ணத்தினால் எழும் மௌனம்; உணர்ச்சியின் மௌனம்; கிளர்ச்சியின் மௌனம் (sensational silence); செயலின் மௌனம்; ஜீவியத்தின் மௌனம்; ஆனந்தத்திற்கு மௌனம் உண்டா? உண்டு எனில் அது என்ன? இல்லையெனில் ஏனில்லை? ஜட மௌனம்; *மௌனத்தின் மௌனம்.*
    10. யோகத்திற்கு நாம் நம்மைப் புறத்திலும் அகத்திலும் தயார் செய்யும் பொழுது எடுக்க வேண்டிய எச்சரிக்கைகள், இன்றியமையாத பாதுகாப்பு.
    11. தொடர்ந்த கடிதப் போக்குவரத்தின் செயல்.
    12. கடிதம் எழுதுவதைத் தள்ளிப் போடும் நேரம், அவசியம்.
    13. குடும்பத்தின் உறவுகளை எப்படிப் புரிந்து கொள்வது.
    14. *வாழ்க்கையில் தீராத சிக்கல்கள் நமக்கு வராததன் பொருள் என்ன?* வருவதின் அர்த்தமென்ன? அவை சமர்ப்பணத்தால் தீருமா? தீராத நேரம் என்ன செய்வது? போன்று ஏராளமான **topics** உள்ளன. அதற்குரிய சந்தர்ப்பம் வரும் நேரம் அதை எடுத்துக் கூறுவது பயன் தரும். இவ்வளவு கருத்துகளுக்கும் அடிப்படையாக உள்ளது உண்டா? நம் மரபில் அது எப்படிச் செயல்பட்டுள்ளது, பகவான் அதை எப்படிக் கையாண்டுள்ளார்? மனிதனுக்கு அது குறிப்பாக என்ன பயன் தரும் என்பனவெல்லாம் ஏராளமாக எழுத உள்ளது. எழுதுவதைத் தவிர்க்கும் நேரம் உண்டு. அந்த நேரம் இவற்றை எப்படிப் புரிந்து கொள்வது?

ஒரு விஷயம் மட்டும் இப்பொழுது எழுதுகிறேன்.

**Accomplishment**, சாதனை, காரியத்தைப் பூர்த்தி செய்வது யோகத்தில் வகிக்கும் அங்கம் என்ன?

1. தெளிவாகச் சிந்தித்து, திட்டமிட்டு **plan** செய்து, அங்கங்களையும், அம்சங்களையும் அவற்றிற்குரிய தொடர்புகளையும் அறிந்து, நினைவுடன், கருத்தாக, பொறுப்பாகச் செயல்பட்டால் எடுத்த காரியம் பூரணமாகப் பலிக்கும். தவறு வராது; அநேகமாகப் பலன் அதிகமாக இருக்கும். இது **physical planning of execution**. உலகம் ஏற்றவற்றை உத்தமமாகச் செய்து முடிப்பது. ஊரில் பெரு வெற்றி பெற்றவர் பின்பற்றும் முறை இது.

2. இம்முறையில் நாம் குறை வைக்கக் கூடாது. இது உடலுக்கு **(physical)** உரிய முறை. இதைக் கடந்து உணர்வுக்கும், அதைக் கடந்து அறிவுக்கும், அதையும் அளவுகடந்து கடந்து ஆத்மாவுக்கும், முடிவாக சத்திய ஜீவியத்திற்கும் உள்ள முறைகள் உண்டு.

   - உதாரணமாக இவற்றை எல்லாம் அறிந்து பயிலுமுன் நம் பெருமுயற்சி முழு முயற்சியாகி, மனம் உண்மையாக **(sincere)** ஆழத்தில் மகிழ்ந்து மலர்ந்து செயல்படும்படி ஒரு வீடு கட்ட முயன்றால், அத்திட்டம் 90 இலட்சமானால், முதல் முறை **(physical planning)** யின் சிறப்பால் 70 இலட்சத்தில் 120 இலட்ச சௌகரியத்துடன் முடியும். உயர்ந்த முறைகளை அறியும்முன் உள்ளபடி முனைந்து முயன்றால் அதற்கு சமர்ப்பணம் எல்லாக் கட்டங்களிலும் தவறாது உறுதுணையானால் 30 இலட்சத்தில், 3 மடங்கு பெரியதாக, 4 மடங்கு சிறப்புடையதாக பாதி நேரத்தில் முடிவதைக் காணலாம். அதாவது அளவுகடந்து உயர்வாகப் பலிக்கும். அதன் இலாபம் பெரியது.

   - *இலாபத்தையும், வெற்றியையும், சந்தோஷத்தையும் ஏற்று, பெற்று கொண்டாடிய பின்*, இதனால் நம் யோக



முயற்சி பெற்றதென்ன என சிந்தனை செய்தால், யோகத்தின் பல்வேறு அம்சங்கள் ஆழ்ந்து, கனத்து, சிறந்து, சிறப்பாக மொட்டுவிடுவதைக் காணலாம். பெற்ற ஆதாயம், இலாபம் பெரியது. அதை ஏற்பது சரி. ஆனால் யோகப்பலனை அதைவிட முக்கியமாகக் கருதினால் நல்லது. அது போன்ற நேரம் மேற்கூறிய 14 தலைப்புகள் 140 தலைப்பாக விரியும். *யோகம் வாழ்வில் செயலாக ஆரம்பமாகும்*. அது பெரிய கட்டம்.

முதல் நிலை சாதனை - அனைவரும் செய்வது. நாம் இம்முறையில் குறை வைக்கக் கூடாது என்பது அன்னை கூறுவது.

முதல் நிலையிலேயே மௌனத்திற்குரியவை இருக்கின்றன. உணர்ச்சியின் முறைகளைக் கூறுமுன் முதல் நிலையில் மௌனத்தின் முறைகளைத் தெரிந்து கொள்ளலாம். பயிலுவது ஆரம்பத்தில் கடினம். பயில முயன்று அனுபவம் பெறலாம். வீடு கட்டும் உதாரணத்தையே தொடர்வோம்.

மௌனம் 4 அல்லது 5 நிலைகளில் உள்ளன. அது மௌனத்திற்குரிய விசேஷம். மௌனம் பிரம்மம் எனப்படும். *முதல்நிலை மௌனம் வீடு கட்டுவதில் செயல்படுவதைக் காண்போம்.*

எளிய மொழியில் சொன்னால் வேலையைச் செய்யும்முன் *மனத்தின் எண்ணத்தால்* செய்ய வேண்டும். செய்வதை முதலில் நினைப்பது அது. நினைப்பது எண்ணத்தால் செயல்படுவது. மௌனத்தால் செயல்பட மனத்தில் எழும் எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்து பின் *மனம் மௌனமாக இருக்கும் பொழுது* வேலையைச் செய்வதாக நினைக்கிறோம். நினைவு ஓரளவு மௌனத்துடன் எழும். முழு மௌனம் முதலில் சிரமம். பூசலார் கோயில் மனதில் கட்டிய பொழுது சிவ பெருமான் வந்தது போல. செயலில் மூன்று பகுதிகள் உண்டு. எண்ணம், உணர்ச்சி, ஜடம். நாம் எண்ணத்தை மௌனமாக்கி சமர்ப்பணம் செய்தால் ஓரளவு உணர்ச்சியின் பகுதியும் சிறிது ஜடத்தின் பகுதியும்

சமர்ப்பணமாகும். அமைதி ஆழ்ந்து தெரியும். *வேலையின் தரம், பக்குவத்தில் இதன் பிரதிபலிப்பு தெரியும்*. ஒரு வேலை பல கோணங்களில் முடிவில்லாமல் விரிவடையும். அந்த அம்சத்தில் இது ஒன்று.

எண்ணத்தை மௌனமாக்கி மனத்தில் வேலை செய்வது இருவகையான அனுபவம் தரும்.

1. வெகு விரைவாகச் சில நிமிஷங்களில் முடியும்.
2. ஒரு நிமிஷம் ஒரு மணி நேரமாக மெதுவாக நகரும்.

இரண்டு பாணிகட்கும் முழுப்பலன் உண்டு. எந்த வகையாக அமைந்தாலும், இரண்டும் கலந்து இருந்தாலும், நேரம் கிடைத்த வரை செய்து, நாம் செய்வது வேலையில் தெரிவதைக் கவனித்தால் சமர்ப்பணத்தின் அம்சம் 1) எண்ணத்திலும் 2) எண்ணத்தின் மௌனத்திலும் தெரியும். நடப்பது விளக்கம் தரும். வேறு விளக்கம் தேவைப்படாது.

- செலவு குறையும். சிரமம் குறையும். போய்ப் பெறுவது தேடி வரும். செலவு குறைந்து பலன் அதிகமாகும்.

  (இவை இம்முதல் நிலைக்குரிய அளவு. முடிவான நிலைக்கு மேலும் உபரியாகும்.)

- *பலனை நன்றியுடன் ஏற்கலாம்.*

  *பலனைவிட முறையை அறிவது முக்கியம்*. நம் எண்ணத்திற்கும் விலை குறைவதற்கும் உள்ள தொடர்பு தெரியும்.

- முறை பலனை விடப் பெரியது.
- *மூலம் அதனினும் பெரியது.*

தற்சமயம் மனம் பலனோடு மறந்து விடாமல், முறையைக் கருதி முடிந்தவரை புரிந்து கொண்டால், அடுத்த கட்டத்தில் மூலத்தை அறிய முயல்வோம்.



வாழ்வின் பெரு உண்மைகள், யோகத்தில் மிகப் பெரிய சக்தியை வெளியிடுபவை

1. உண்மை பெருந்தன்மையால் (**Sincerity-Generosity**) உலகத்தின் சிறுமை, கயமைகளினின்று காப்பாற்றும். மேலும் வெற்றி, அதிர்ஷ்டம், செல்வம் தரும்.
2. இன்று முழுவதும் அர்த்தமற்றதாய்விட்ட கட்டுப்பெட்டிப் பழக்கங்களுள் மூலமான சத்தியம் உண்டு. சிலவற்றுள் முழுமையான சத்தியம் உண்டு. *அது முழுமையாகப் பாராட்டப்பட்டால்*, பலன் முழு எதிர்ப்பை மீறி பூரணமாக வரும் - சத்தியத்திற்கு ஜீவனுண்டு.
3. சமர்ப்பணம் முழுமையானால், சந்தர்ப்பங்களையும், அறியாமையையும் மீறிப் பலிக்கும்.
4. சிக்கனம் நல்லது கருமித்தனம் நல்லதல்ல.
5. நம்மால் பிறருக்கு நம் மீது தவறில்லாமல் தண்டனை வந்தாலும் நாள் கழித்து அது நமக்கு வரும்.
6. *அளவுக்கு மீறிய நல்லது, சேவை, பெருந்தன்மை எதிரான பலன் தரும்.*
7. சமர்ப்பணம் சமூக சட்டங்களையும், வாழ்வின் சட்டங்களையும், கர்மத்தையும் மீறிப் பலிக்கும்.
8. பிரச்சனை உருவான வழியே அதைத் தீர்க்க எதிராகச் சென்றால், பிரச்சனை தீரும்.
9. சுயநலமி, தன் சுயநலத்தால் உலகம் பலனடைவதாக நினைப்பான்.
10. எந்த இலட்சியத்தை வளர்க்க ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டதோ அதே இலட்சியத்தை அதே ஸ்தாபனம் அழிக்கும்.

(தொடரும்)

## ஜீவிய மணி

*எதிர்பார்க்காதவனை எதிர்காலம் கட்டுப்படுத்தாது.*

## அன்பர் அனுபவம்

பரம்பொருள் புத்தகத்தை மிகுந்த ஆர்வத்துடன் வாசித்த ஒரு வட இந்தியப் பெண்மணியின் அனுபவம்.

அவரது பெயர் மது வர்மா. ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ராஞ்சியைச் சேர்ந்தவர். அவருக்கு இரண்டு மகன்கள். மூத்த மகன் சிங்கப்பூரிலும் இளைய மகன் அமெரிக்காவிலும் பணி புரிகிறார்கள்.

ஒரே காலனியில் இருப்பதால் ஸ்ரீ அன்னையைப் பற்றி கேள்விப்பட்டு அன்பர் வீட்டில் நடக்கும் தியான கூட்டங்களில் பல வருடங்களாக கலந்து கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ கர்மயோகி அவர்கள் எழுதியிருக்கும் புத்தகங்களின் சாரங்களையும், கடந்த சில மாதங்களாக மலர்ந்த ஜீவியத்தில், 'பரம்பொருள்' புத்தகம் வாசிப்பதால் அன்பர்கள் வாழ்வில் ஏற்பட்ட அற்புதங்களை விவரிக்கும் அனுபவக் கட்டுரைகளை அவருக்கு ஹிந்தியில் மொழி பெயர்த்துச் சொல்ல மிகவும் நெகிழ்வுடன் கேட்டுக் கொள்வார்.

**'Life Divine'**-ஐ தொடர்ந்து படித்தால் படிப்பவரை இப்புத்தகம், **higher consciousness**-க்கு எடுத்துச் செல்லும் என்றும், மேலும் புத்தகத்தைப் பற்றி ஸ்ரீ கர்மயோகி அவர்கள் எழுதி இருப்பவற்றை ஏற்கனவே அறிந்திருந்தார்.

'பரம்பொருள்' புத்தகத்தில் ஆங்கிலத்திலும், **'Life Divine'** எளிமையாக எழுதப்பட்டிருப்பதை அறிந்ததும், ஒரு பக்கம் தமிழ் இருந்தாலும் பரவாயில்லை என்று மூன்று பாகங்களையும் ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டார். இனி அவர் பகிர்ந்து-கொண்டதை அப்படியே தர முயல்கிறேன்.

எனக்கு ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்தாலும் சில இடங்களில் தடுமாறுவேன். முதன் முதலாக பள்ளிக்குச் சென்று எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளும் குழந்தைகள், வீட்டுப் பாடம் எழுத அம்மாவுடன் அமர்வது போல், நான் வீட்டு வேலைகளை



முடித்து விட்டு, 'பரம்பொருள்' புத்தகத்தை எடுத்துக் கொண்டு ஸ்ரீ அன்னையின் முன் அமர்ந்து கொள்வேன். அம்மாவிடம் கேட்டு எழுதும் குழந்தை போல எனக்கு ஏதாவது தெரியா-விட்டால் ஸ்ரீ அன்னையிடம் கேட்டுப் படிப்பேன்.

சில வார்த்தைகளைத் தவறாக உச்சரிக்கிறோம் என்று உணர்ந்து ஸ்ரீ அன்னையை ஏக்கத்துடன் பார்க்கும் போது, 'நீ என்ன சொல்ல வருகிறாய் என்று புரிந்துவிட்டது, மேற்கொண்டு வாசி' என்று ஸ்ரீ அன்னை குறும்பாகச் சொல்வது போலிருக்கும்.

எப்போதும் எந்த விஷயத்திலும் எதையாவது கூறியபடி இருப்பது என்னுடைய சுபாவம். மௌனமாக இருப்பது என் குணத்திற்குச் சிறிதும் பொருத்தமற்ற ஒன்று.

என்னுள் அன்னை என்னை வழி நடத்துவதை அறிந்த பின், எங்கு என்ன பேச வேண்டும் என்பதை அவரே கூறுகிறார். தேவையற்ற இடத்தில், 'இங்கு உனக்கு வேலையில்லை, நிறுத்திக்கொள், பேசாமலிரு' என்கிறார். தேவையான இடத்தில் அளவோடு பேச உதவுகிறார்.

நான் எப்படிப் பேசாமலிருக்கிறேன் என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இது என் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட விஷயமில்லை. நிறுத்து, என்று உள்ளிருந்து குரல் எழுந்ததும், பேச்சை நான் நிறுத்தவில்லை, அது தானே நின்று விடுகிறது என்பது எனக்கே புதிராக இருக்கிறது. எங்கு என்ன பேச வேண்டும், கூடாது என்ற தெளிவுடன் என் **personality** முற்றிலும் சாந்தமாக மாறியிருப்பது எனக்கே ஆச்சரியமாக உள்ளது. இம்மாற்றங்கள் அசாதாரணமானவை. மனித கட்டுப்பாட்டை மீறியவை. என்னுள் பெரிய அமைதியை என்னால் உணர முடிகிறது.

பொதுவாக தோழிகள் யாராவது என்னோடு பேச வீட்டிற்கு வந்தால், எல்லா வேலைகளையும் அப்படியே போட்டுவிட்டு நான் அவர்களோடு தேவையற்ற பேச்சில் நேரத்தை வீணடிப்பதை நான் அடிக்கடி செய்வதுண்டு. அவர்கள் தவறாக

எண்ணுவார்கள் என்று நான் மணிக்கணக்கில் அவர்களோடு பேசிக் கொண்டிருப்பது வழக்கம்.

ஆனால் அகத்தில் இம்மாற்றம் ஏற்பட்ட பிறகு, யாராவது வந்தால் அவர்களோடு பேச எனக்குத் தோன்றுவதில்லை. நல்ல முறையில் இரண்டு நிமிடங்கள் அவர்களோடு பேசி விட்டு வேலை இருப்பதாகக் கூறி அனுப்பி விட்டு என் வேலையில் ஈடுபடுகிறேன். அவர்களும் நான் கூறுவதை ஏற்றுப் புரிந்து கொண்டு மன வருத்தமின்றி சென்று விடுவதை என்னால் நம்ப முடியவில்லை. யோசித்தால், என்னுள் ஏற்பட்ட மாற்றங்கள் அடுத்தவரையும் மாறச் செய்கிறது என்று எனக்குப் புரிந்த பொழுது தெளிவு ஏற்பட்டது.

இவை சிறு விஷயங்களானாலும் இம்மாற்றங்கள் எனக்கு மிகப் பெரியவை. என் கணவர், நான் தோழிகளோடு அரட்டையில் ஈடுபடாமல், அமைதியாக இருப்பதைப் பார்த்து மலைத்துப்போய் ‘உனக்கு என்னாயிற்று’ என்று கேட்கிறார்.

எந்த விஷயத்திற்கும் நான் டென்ஷன் ஆகிவிடுவதுண்டு. சிறிது நாட்களுக்கு முன் வீட்டில் சில தேவையற்ற மரச்சாமான்களை விற்க எண்ணினேன். இது போன்ற நேரங்களில் பொதுவாக நான் அதிக பதற்றத்துடன் காணப்படுவேன். இம்முறை உள்ளிருந்து ‘ஒரு டென்ஷனும் தேவையில்லை, வேலை முடிந்து விடும்’ என்ற குரல் எழுந்தது. எல்லா சாமான்களும் ஒன்று விடாமல் நேற்று, நல்ல விலைக்கு விற்கப்பட்டன.

இந்நிலையில் அமெரிக்காவில் இருக்கும் எனது இளைய மகனுடன் இரண்டு மாதங்கள் தங்க நினைத்திருந்தேன். முதன் முதலாக தனியாகப் பயணம் செய்கிறேன். புறப்படும் நாளன்று அதிக வேலை காரணமாக உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. கிட்டத்தட்ட 19 மணிநேரப் பயணம், இந்த உடல் நிலையுடன் எப்படிப் போவாய் என, என்னைத் தனியாக அனுப்ப பயந்தனர். ஆனால் நான் கேபின் லக்கேஜில் போடுவதற்காக சூட்கேசில் வைத்திருந்த ‘பரம்பொருள்’ புத்தகங்களை எடுத்து கைப்பையில் வைத்துக் கொண்டேன்.



ஸ்ரீ அன்னை என்னுடன் கூடவே வரும்பொழுது எதற்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றியது.

எந்த விதமான தொந்தரவும் இன்றி பயணம் இனிமையாக இருந்தது.

அமெரிக்காவில் இரண்டு மாதங்களும் ‘பரம்பொருள்’ புத்தகங்களைத் தவறாது படித்தேன். தலை முழுக்கக் காலியாகி விட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது (என்று தன் பின்னந்தலையினைத் தொட்டுச் சொல்கிறார்). சந்தோஷம் பொங்கி வருகிறது. கனம் நெற்றிப் பொட்டில் சேருகிறது.

நான் வாசிப்பதைக் கேட்ட எனது மகன், அம்மா உங்கள் ஆங்கில உச்சரிப்பு ஆங்கிலத்தில் டாக்டரேட் முடித்தவர்கள் போலுள்ளது. இப்பொழுது நீங்கள் படிப்பதை யாராவது கேட்டால் நீங்கள் படிக்காதவர் என யாரும் நம்ப மாட்டார்கள். எப்படிம்மா இப்படி படிக்கிறாய் என ஆச்சர்யமாய் சொன்னான்.

அமெரிக்கா புறப்படும்பொழுது, கணவரை விட்டுத் தனியாக அங்கு எப்படி இருப்பாய் என்று மற்றவர் கேட்டனர். அங்கிருந்த 52 நாட்களும் நான் பரம்பொருள் படிப்பதிலும் அன்னையோடு பேசுவதிலும் நாட்களைக் கழித்தேன். பயமோ தனிமையோ என்னை வாட்டவேயில்லை. மனம் சில்லென்று அமைதியாக அற்புதமான ஒன்றாக இருந்தது. என்னோடு ஒரு தெய்வீக ஜீவன் அளவற்ற **energy**-யுடன், பிரியாமல் இருந்ததை அறிந்தேன்.

கணவரைத் தனியாக விட்டு வந்திருப்பதால், சாப்பாட்டிற்கு என்ன செய்கிறாரோ, உடல் நிலை எப்படி உள்ளதோ என்ற கவலைகள் எழும்போது, உள்ளிருந்து அதே குரல், ‘கவலைப்பட அவசியமில்லை’ என்றது. அதே போல் நான் திரும்பி வரும் வரை, அவர் ஒரு நாளும் சாப்பாட்டிற்கு சிரமப்படவில்லை, ஒரு சிறு உபாதையும் இன்றி நல்ல உடல்நிலையோடு இருந்தார்.

அங்குக் காலையில் வாக்கிங் போகும் போது, ப்ளூ பெர்ரி மரங்களும், சிறு அணில்களும்கூட என்னுடன் பேசின. அனைத்து இயற்கையோடும் - மரங்கள், புல்வெளிகள்,

சாலைகள், ஓடைகள், நதிகள், பறவைகள் - நான் அளவளாவி அவற்றுடன் ஐக்கியமாகும் அற்புத அனுபவம் எனக்குக் கிட்டியது. அமெரிக்காவிலிருந்து திரும்புவதற்கு ஒரு நாள் முன்னர் அவை அனைத்தையும் தொட்டு, நன்றி கூறி அவற்றிடமிருந்து நான் விடை பெற்றேன்.

அமெரிக்காவில் இருந்த போது அற்புதமான கனவுகள் என்னை ஆட்கொண்டன. அதில் நான் அழகான தோட்டத்தில், வெண்ணிறத்தில் புலி, நாகம் மற்றும் மயில் இவைகளைப் பார்த்தேன். மேலும் சிவன், சக்தி போன்ற தெய்வங்களும் கனவில் வந்தார்கள்.

அமெரிக்காவிலிருந்து திரும்பிய போது, அனைவரும் நான் தனிமையில் தவித்து வாடி வருவேன் என எதிர்பார்த்தார்கள். ஆனால் நானோ தனிமையில் இனிமை எய்தி, இமயமலை-யிலிருந்து திரும்பிய யோகி போல் என்னை உணர்ந்தேன்.

முன்பு கோபம் கொள்ளும் குணமுடையவளாக இருந்தேன். இப்போது என்னுள்ளிருந்து அமைதி, நிதானம், பொறுமை இவற்றை வெளிப்படுத்தும்படி குரல் வழி நடத்துகிறது.

இப்போதெல்லாம் எனக்கு பிரார்த்தனையில் 'அம்மா, என்னை நீ முழுவதுமாக ஏற்றுக்கொள்' என்று மட்டுமே கேட்கத் தோன்றுகிறது. வேறு எதுவும் மனத்தில் எழுவதில்லை.

நன்றி! நன்றி! நன்றி!

### ஜீவிய மணி

*ஞானத்தைத் தேடும் மனிதன் முதலில் திறமையைப் பெறுகிறான். அன்னையை அறிவது புண்ணியம் எனில் காணிக்கை கொடுக்கத் தோன்றுவது பெரிய அனுபவத்தால் வருவது. $10 காணிக்கை கொடுக்க மறுத்தவர் இரண்டு ஆண்டிற்குப் பின் $120 கொடுத்தார். அந்த அனுபவம் பெற 800 கோடி வியாபாரத்தையும் 30 கோடி இலாபத்தையும் சொந்த கம்பெனியையும் இழந்தபின் இந்த அறிவு ஏற்பட்டது. இது அனுபவம் தரும் திறமை. இதற்குப் பின் வருவது ஞானம்.*



## அன்னை இலக்கியம்

## மீன்கொடி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 16. மறந்ததை நினைவூட்டல்

வழக்கம் போல நான் தாமதமாக எழுந்தபோது வீடு வேறு மாதிரி இருந்தது. சிறிது நேரம் இது யார் வீடு என்று குழம்பி பின் தெளிந்தேன்.

ஜமுனா தலைக்குக் குளித்து விட்டு கிணற்றடியில் உட்கார்ந்து கூந்தலை விரித்துப் போட்டு காய வைத்துக் கொண்டிருந்தாள். முகம் கழுவி விட்டு அவளருகே அமர்ந்தேன். பெண்கள் போடும் ஷாம்பூ, சோப்பின் நறுமணம் அவளிட-மிருந்து வந்து என் மெல்லுணர்ச்சிகளைத் தூண்டியது.

பக்கத்திலிருந்த கட்டடத்தைக் காட்டி 'இதுதான் கம்பெனி கட்டடமா?' என்று கேட்டாள் ஜமுனா.

'ஆமாம். பழைய கட்டடம். தாத்தா பத்திரமாக பராமரித்து வந்தார்' என்றேன்.

'வந்தாரா? இப்போது யார் பார்த்துக் கொள்கிறார்கள்?' என்று கேட்டாள் ஜமுனா.

'யாருமில்லை. போன வருடம் அண்ணார்கள் தாத்தாவிடம் பேசினார்கள். 'மாத சம்பளம் செலவுக்குப் போதவில்லை. சொந்தமாக தொழில் செய்ய நினைக்கிறோம். கம்பெனியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்றார்கள்' என்றேன்.

'இந்தக் கம்பெனியைவிட ஆயிரம் மடங்கு பெரிய கம்பெனிக்குத் திட்டம் போடுவதுதானே? புதிதாக ஏதாவது செய்ய வேண்டியதுதானே?' என்றாள் ஜமுனா.

'இதையேதான் தாத்தாவும் கேட்டார். 'நீங்களே புதியதாக ஒரு கம்பெனி ஆரம்பியுங்கள். என்னால் முடிந்த உதவி செய்கிறேன்' என்றார். ஆனால் அண்ணார்கள் 'எங்களுக்கு ஓடும்

கம்பெனிதான் வேண்டும். அதை வைத்து இருபது வருடங்களுக்கு முன்னால் இருந்தது போல கம்பெனியை உயர்த்திக் காட்டுகிறோம்' என்றார்கள்' என்றேன்.

'நீங்கள் என்ன சொன்னீர்கள்?' என்று கேட்டாள் ஜமுனா.

'நான் சொல்ல என்ன இருக்கிறது? தாத்தாவிற்குப் பேரர்கள் மீது எப்போதுமே நம்பிக்கையில்லை. இருந்தாலும் எங்கள் பெயருக்குக் கம்பெனியை மாற்றிக் கொடுத்தார். தாத்தா எதையாவது கொடுத்துவிட்டால் அதைப் பற்றி நினைக்கக் கூட மாட்டார். ஆனால் எங்கள் மீதுள்ள பிரியத்தால் கம்பெனியை கொடுத்த பின்பும் 'நீங்கள் கற்றுக் கொள்ளும்வரை வருகிறேன்' என்று சொல்லி தினமும் அவர்தான் வந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார். 'நீங்கள் இப்படிச் செய்தால் நாங்கள் எதையும் கற்றுக் கொள்ள முடியாது' என்று அண்ணார்கள் கூறியும் அவர் வந்து கொண்டிருந்தார். அதைக் கேள்விப்பட்ட பாட்டி 'வயதானாலும் பணத்தாசை போகவில்லை' என்று கேலி செய்தாராம். அதன்பின் தாத்தா கம்பெனிக்கு வருவதை நிறுத்திக் கொண்டார். தாத்தா கம்பெனி பற்றி அண்ணார்களிடம் ஒரு வார்த்தை விசாரிப்பதில்லை. அண்ணார்களும் எதையும் தாத்தாவிடம் கூறுவதில்லை' என்றேன்.

'கம்பெனி பற்றி நீங்கள் தாத்தாவிடம் சொல்வதுதானே?' என்றாள் ஜமுனா.

'நானா! கம்பெனி பற்றி எனக்கென்ன தெரியும்?' என்றேன்.

'நீங்களும் கம்பெனியில் உரிமை உள்ளவர்தானே?' என்றாள் ஜமுனா.

'அதெல்லாம் பத்திரத்தில்தான். மற்றபடி அண்ணார்களுக்குத்தான் எல்லாம் தெரியும். நான் கம்பெனிக்குள் போய் எத்தனையோ காலமாகிவிட்டது. என்னிடம் சாவி கூட இல்லை' என்றேன்.

'ஆனால் தாத்தா கஸ்டமரைப் பார்க்கப் போயிருக்கிறார் என்று போன வாரம் கூட போனில் சொன்னீர்களே' என்றாள் ஜமுனா.



'அவரைப் பற்றித் தெரிந்த போட்டிக் கம்பெனிக்காரர்கள் பெரிய சம்பளத்திற்கு வேலைக்குக் கூப்பிட்டார்கள். முடியாது என்று கூறிவிட்டு எண்பது வயதில் ஏஜென்டாக அலைந்து, திரிந்து சொந்தமாக தொழில் செய்கிறார்' என்றேன்.

'எண்பது வயதுதானே ஆகிறது! இன்னும் எத்தனையோ காலம் வேலை பார்க்கலாமே' என்ற ஜமுனா கட்டடத்தை மீண்டும் பார்த்தாள். 'பல நாள் மூடிக்கிடக்கும் கட்டடம் போலிருக்கிறதே!' என்றாள்.

'சில மாதங்களாக அப்படித்தான் கிடக்கிறது. அண்ணார்களுக்கு அலுவலக வேலை அதிகமாக இருப்பதால் வர முடிவதில்லை என்று நினைக்கிறேன்' என்றேன்.

'சிப்பந்திகள் வரத்தானே வேண்டும்?' என்றாள் ஜமுனா.

'அக்கவுண்டண்டும், பியூனும் எப்போதாவது வருவார்கள். வேறு எவரும் வருவதில்லை' என்றேன்.

'ஏன்?' என்றாள் ஜமுனா.

'அண்ணார்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளை என்னிடம் கேட்டால் நான் என்ன பதில் சொல்ல முடியும்? என்னிடம் சங்கப் பாடல்கள் பற்றிக் கேள். பதில் சொல்கிறேனா இல்லையா பார்' என்றேன்.

புன்னகைத்தாள் ஜமுனா.

'இன்று பத்தரைக்கு கணக்கர் பழனியப்பரின் பெண் ராகினிக்குக் கல்யாணம். போய் வரலாமா? நேற்று கிளம்பும்போது ஜவுளி அண்ணி சொன்னார். அப்படியே வீடுகளை உனக்கு காட்டும்படி காபி அண்ணி சொன்னார்' என்றேன்.

'நிலம்?' என்றாள் ஜமுனா.

'நம் நிலத்தையும் காட்டுகிறேன்' என்றேன்.

'மோட்டார் சைக்கிளைத் துடைத்து வைத்திருக்கிறேன். திருப்பித் தந்து விட்டு வாருங்கள். வெளியே போகலாம்' என்றாள் ஜமுனா.

'வண்டி இல்லாமல் எப்படிப் போவது!' என்றேன்.

‘இத்தனை நாள் எப்படிப் போனீர்கள்?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘வீட்டில் அண்ணார்களின் கார்களும், அண்ணிகளின் ஸ்கூட்டர்களும் இருக்கின்றனவே’ என்றேன்.

‘நமக்கென வண்டி இல்லையென்றால் வேறு ஆயிரம் வழிகள் இல்லாமலா போய் விட்டது? ஆட்டோவில், பஸ்ஸில் போவோம். அது முடியவில்லை என்றால் நடந்து போவோம்’ என்றாள் ஜமுனா.

‘உனக்கு எந்த சிரமமும் இல்லாமல் வெளியே கூட்டிச் சென்று வர ஆசைப்படுகிறேன்’ என்றேன்.

‘புது வண்டி நன்றாக இருந்தது. எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் இரவல் வண்டியில் ஊர்வலம் வர சங்கடமாக இருக்கிறது. நேற்று உங்களோடு வண்டியில் வந்தபோது உங்கள் நண்பரோடு வருவது போலிருந்தது’ என்றாள் ஜமுனா.

‘வண்டியை இப்போதே திருப்பிக் கொடுத்து விடுகிறேன்’ என்றேன்.

கம்பெனி வராண்டாவில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளை சுட்டிக்காட்டினாள் ஜமுனா. ‘இது தாத்தாவின் சைக்கிள்தானே? ஏன் இங்கு நிற்கிறது?’ என்று கேட்டாள்.

‘கல்யாண சமயத்தில் பல பெரிய மனிதர்கள் வீட்டிற்கு வருவார்கள். சைக்கிளைப் பார்த்தால் சிரிப்பார்கள் என்று நினைத்து அண்ணார்கள் தாத்தாவிற்குத் தெரியாமல் சைக்கிளை இங்கே கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். கல்யாண வேலையில் தாத்தா கவனிக்கவில்லை’ என்றேன்.

‘கவனித்திருப்பார். பொருட்படுத்தியிருக்கமாட்டார். சைக்கிள் தூசி படிந்து நிற்கிறது. நீங்கள் வருவதற்குள் துடைத்து வைக்கிறேன். தாத்தா சைக்கிளில் நாம் வெளியே போய் வரலாம்’ என்றாள் ஜமுனா.

‘உன்னுடனா!’ என்றேன்.

‘அவ்வளவு கனமாகவா இருக்கிறேன்?’ என்றாள் ஜமுனா.



‘பெண்ணைப் பின்னால் உட்கார வைத்து சைக்கிள் ஓட்டி எனக்குப் பழக்கமில்லை’ என்றேன்.

‘நான் சுந்தரத்தையும், அப்பாவையும் பின்னால் உட்கார வைத்து நன்றாக ஓட்டுவேன். இன்று உங்களை பின்னால் உட்கார வைத்து ஓட்டிக் காட்டுகிறேன்’ என்றாள் ஜமுனா. பின் சிரித்துக் கொண்டே ‘அப்பா வீட்டில் ஒரு சைக்கிள்தான் இருக்கிறது. நானும், அப்பாவும் மாற்றி மாற்றி ஓட்டுவோம். சுந்தரம் சைக்கிள் ஓட்டுவதற்காக தவம் கிடப்பான்’ என்றாள்.

பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தேன்.

‘வரும்போது ஒரு நாளைக்கு வாடகை ஸ்கூட்டர் எடுத்து வாருங்கள்’ என்று கூறினாள் ஜமுனா.

என்னிடம் பணம் எதுவுமில்லை. இருந்த எல்லாவற்றையும் நேற்றே அவளிடம் கொடுத்துவிட்டேன்.

‘உங்கள் நண்பர் சிவசங்கரன் சாப்ட்வேர் வேண்டும் என்று கேட்டாராமே. தாத்தா போனில் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்’ என்றாள் ஜமுனா.

‘போகவேண்டும். நேரமே கிடைக்கவில்லை’ என்றேன்.

‘வண்டியை கொடுத்துவிட்டு திரும்பும்போது அவரையும் பார்த்து விட்டு வாருங்கள்’ என்றாள் ஜமுனா.

‘இன்னொரு நாள் போகிறேன். இன்று நாம் வெளியே போகவேண்டுமே’ என்றேன்.

‘வண்டியை கொடுத்துவிட்டு திரும்பும்போது அவரையும் பார்த்து விட்டு வாருங்கள்’ மீண்டும் சொன்னதையே சொன்னாள் ஜமுனா.

இந்த விஷயத்தில் மேற்கொண்டு பேச எதுவுமில்லை என்பது புரிந்தது.

கிளம்பும்போது என்னிடம் நூறு ருபாய் தந்தாள்.

அந்த பணத்திற்குப் பெட்ரோல் போட்டேன். தினகரன் வண்டியை இரவல் தரும்போது பெட்ரோல் போட்டுத்தானே தந்தான்?

நான் தினகரனின் வீட்டிற்குப் போனபோது அவன் அலுவலகம் சென்று விட்டதாக அவன் அம்மா சொன்னார். அப்போதுதான் என் வயதினரில் பெரும்பாலானவர்கள் ஒன்பது மணிக்கெல்லாம் அலுவலகம் சென்று விடுவார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். வண்டியையும், சாவியையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியே வந்தேன்.

பஸ் நிறுத்தத்தில் நிற்கும்போதுதான் கையில் பணமில்லை என்பது நினைவிற்கு வந்தது. நடக்க வேண்டியதுதான். மெல்ல நடந்து கொண்டிருந்த போது ஒரு சைக்கிள் என்னருகே வந்து நின்றது. 'என்ன சார், வெயிலில் நடந்து போகிறீர்கள்?' என்று கேட்டான் சைக்கிள் ஓட்டி வந்த பையன்.

அடையாளம் தெரியாமல் திகைத்தேன்.

'சென்னை பர்னிச்சர் மார்ட்டில் வேலை பார்க்கிறேன். நீங்களும், அக்காவும் பாய் வாங்கினீர்களே?'

'ஓ! நீ எங்கே இந்த பக்கம்?'

'தலையணை டெலிவரி கொடுத்துவிட்டு கடைக்குப் போகிறேன்'.

'பஸ் டிக்கட்டிற்கு பணமில்லாமல் வந்து விட்டேன். அதனால் நடக்கிறேன்' என்று கூறி புன்னகைத்து விட்டு நடக்கத் தொடங்கினேன்.

'சார், பின்னால் உட்காருங்கள்' என்றான் கடை பையன்.

'பரவாயில்லை தம்பி. நான் நடக்கிறேன்' என்றேன்.

'வெயிலில் நடந்தால் அக்கா வருத்தப்படுவார். ஏறுங்கள் சார்' என்றார்.

அவன் சைக்கிளில் ஏறிக் கொண்டு சிவசங்கரனின் அலுவலகம் சென்றேன். பங்கு தரகர் என்பதால் அலுவலகம் பரபரப்பாக இருந்தது.

'காத்திருக்கவா சார்?' என்றான் பையன்.

'வேண்டாம் தம்பி, நன்றி' என்று கூறி விட்டு அலுவலகத்திற்குள் நுழைந்தேன்.



'என்னடா மாப்பிள்ளை! சொல்லி பல வாரங்களாக வரவில்லை. கல்யாணமாகி ஒரே நாளில் பொறுப்பு வந்து விட்டதா!' என்றான் சிவசங்கரன்.

'அதெல்லாம் ஒன்றுமில்லை. ஜமுனாதான் உன்னைப் பார்த்து வரச் சொன்னாள்' என்றேன்.

'அப்படிப் போடு அருவாளை! இனிமேல் அறுவடைதான்' என்றான் சிவசங்கரன்.

'நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டேன்.

'சின்ன வேலைதான் பரமார்த்தா. இந்த சாப்ட்வேரில் சில சிறிய மாற்றங்கள் செய்ய வேண்டும்' என்று கூறி அவனிடம் ஏற்கனவே இருந்த சாப்ட்வேரில் நான் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கினான்.

'சிவா, இது வாடிக்கையாளர்கள் கணக்குகளை வைத்திருக்கும் முக்கியமான சாப்ட்வேர். கொஞ்சம் அதிக செலவானாலும் அனுபவசாலிகளிடம் கொடுப்பதுதான் சரி என்று நினைக்கிறேன்' என்றார் சிவசங்கரனின் உதவியாளர்.

'நாம் வேலை தந்தால்தானே இவனுக்கு அனுபவம் வரும்? இவன் செய்வதை சரிபார்த்து விட்டுத்தானே பயன்படுத்தப்-போகிறோம்?' என்றான் சிவசங்கரன்.

'இரண்டு நாட்களில் செய்து தருகிறேன்' என்றேன்.

'உன் போன்ற பெரிய வீட்டுப் பிள்ளைக்கு நான் பணம் தருவது வேடிக்கைதான். ஆனால் வேலைக்கென்று ஒரு மதிப்பிருக்கிறதே' என்று கூறிவிட்டு இரண்டாயிரம் தந்தான். 'இது முன்பணம். வேலை முடிந்ததும் மீதி மூவாயிரம் தருகிறேன்' என்றான்.

சிவசங்கரன் அலுவலகம் அருகிலேயே எங்கள் குடும்பத்திற்கு நன்றாகத் தெரிந்த ஸ்கூட்டர் மெக்கானிக் கடை இருந்தது. ஸ்கூட்டர் ஒன்றை ஒரு நாள் வாடகைக்குக் கேட்டேன். 'ஜமுனாவோடு வெளியே போக வேண்டும். வாடகை ஸ்கூட்டரில் போகலாம் என்று வீட்டில் சொன்னார்கள்' என்றேன்.

‘அது யார் ஜமுனா?’ என்றார் கடைக்காரர்.

‘மன்னித்துக் கொள்ளுங்கள். அண்ணார் உங்களுக்கு அழைப்பு தந்திருப்பார் என்று நினைத்து விட்டேன்’ என்று கூறிவிட்டு கல்யாண விவரங்களைக் கூறினேன். ‘ஜமுனாவும், நானும் வீடுகளையும், நிலத்தையும் பார்க்கப் போகிறோம். கனப்பாக்கம் வரை போக வேண்டும். அதற்கு ஏற்றபடி ஸ்கூட்டர் வேண்டும்’ என்றேன்.

கடைக்காரர் சிரித்தார் ‘புதிதாக கல்யாணம் செய்தவர்கள் ஸ்கூட்டரில் போவதுதான் சரி’ என்றவர் கொஞ்சம் யோசித்து விட்டு ‘அடிக்கடி வெளியே போக வேண்டியிருக்குமே! எதையும் யோசிக்காமல் ஒரு வண்டி வாங்கி விடுங்கள். நான் நாலைந்து பழைய வண்டிகளைச் சரி செய்து புதுப்பித்து வைத்திருக்கிறேன்’ என்றார்.

‘இப்போதைக்கு கையில் பணமில்லை’ என்றேன்.

‘உங்களைப் போன்றவர்கள் பேங்கிலும், லாக்கரிலும்தான் பணம் வைத்திருப்பீர்கள்’ என்று சிரித்த மெக்கானிக் ‘இந்த நீல நிற வண்டியை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு வாரம் ஓட்டிப் பாருங்கள். திருப்தியாக இருந்தால் வாங்கிக் கொள்ளுங்கள். பிடிக்கவில்லை என்றால் வாடகை மட்டும் கொடுத்து விடுங்கள்’ என்றார்.

தெரிந்தவர் என்பதால் முன்பணம் எதுவும் கேட்கவில்லை.

நீலநிற ஸ்கூட்டரில் வீடு திரும்பினேன். விவரங்களைச் சொல்லி ஜமுனாவிடம் இரண்டாயிரத்தைத் தந்தேன். வாங்கிக் கொண்டவள் ‘நாளை மறுநாள் சிவசங்கரண்ணா மூவாயிரம் தரும்போது ரொக்கமாக வாங்க வேண்டாம். நல்ல பெரிய கம்பெனியில் பங்குகள் வாங்கித் தரச் சொல்லுங்கள்’ என்றாள்.

‘எனக்கு பங்கு வாங்கத் தெரியாதே’ என்றேன்.

‘உங்களையா வாங்கச் சொன்னேன்? உங்கள் நண்பரிடம் சொல்லுங்கள். வாங்கித் தருவார்’ என்றாள் ஜமுனா.

‘அதுதான் சரி. வெளிநாட்டுகாரர்களிடம் எத்தனை அழகாக ஆங்கிலத்தில் பேசுவான் தெரியுமா! ஆனால் நாவல்கள் எதுவும்



படிக்க மாட்டான். நான் ஏதாவது கதை சொன்னால் கூட பேச்சை மாற்றி விடுவான்’ என்றேன்.

புன்னகைத்தாள் ஜமுனா.

## 17. சொத்துகளை அறிதல்

பத்தேகால் மணிக்கு நானும், ஜமுனாவும் கிளம்பினோம்.

‘நம் டிரைவர் ரகுதான் மாப்பிள்ளை’ என்றேன்.

‘காதல் கல்யாணமா?’ என்றாள் ஜமுனா.

‘சரியான ஊகம்தான். தாத்தா கம்பெனிக்காக ஒரு கார் கொடுத்திருந்தார். அவர் சைக்கிளில்தான் போவார். கார் பழனியப்பன் சாரை அழைத்து வர அவர் வீட்டிற்கு அடிக்கடி போகும். ரகுதான் டிரைவர். பழனியப்பன் சார் தன் பெண்ணை அந்தக் காரில் காலேஜிற்கு அனுப்பி வைப்பார்’ என்றேன்.

‘கார் எங்கே?’ என்றாள் ஜமுனா.

‘நான் காதலைப் பற்றிப் பேசுகிறேன். நீ காரைப் பற்றி கேட்கிறாய்! அண்ணார்கள் பழைய கார் செலவு வைக்கிறது என்று விற்று விட்டார்கள். இப்போது ரகு வீட்டுக் கார்களை ஓட்டுகிறார்’ என்றேன்.

பத்தரைக்கு மண்டபத்திற்குப் போய்விட்டோம்.

மண்டப நுழைவாசலில் வரவேற்பு மேஜைக்கு அருகே நின்றிருந்த பழனியப்பன் சார் ‘வாப்பா பரமா, வாம்மா’ என்று கூறிவிட்டு வேறு எவருடனோ பேச ஆரம்பித்தார். எத்தனை விருந்தாளிகள். தனியாளாக எத்தனை பேரைக் கவனிக்க முடியும்!

நாங்கள் மேஜைக்குப் பின்னால் நின்றிருந்த பட்டுச் சேலை பெண்களிடம் சந்தனம், குங்குமம், ரோஜா, கல்கண்டு வாங்கிக் கொண்டு மண்டபத்திற்குள் நுழைந்தோம். கடைசி வரிசையை

நோக்கி நகர்ந்தேன். முன் வரிசையை நோக்கி நடக்கத் தொடங்கியிருந்த ஜமுனா திரும்பிப் பார்த்தாள்.

‘நான் அழைப்பு வரும் எல்லா விசேஷங்களுக்கும் போவேன். எவரும் என்னைக் கவனிக்காத இடத்தில் உட்கார்ந்திருந்துவிட்டு திரும்பி விடுவேன்’ என்றேன். காலியாக இருந்த கடைசி வரிசையின் முதலிரண்டு நாற்காலிகளைப் பார்த்தேன்.

நுழைவாயிலில் பரபரப்பு எழுந்தது. பழனியப்பன் சார் ‘வாருங்கள், வாருங்கள், உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தோம்’ என்று அண்ணார்களையும், அண்ணி-களையும் வரவேற்பது தெரிந்தது. பின் அவர்களைத் தன்னோடு முன் வரிசைக்கு அழைத்துச் சென்று அமரச் செய்தார். தன் மனைவியையும், போட்டோ எடுப்பவரையும், வீடியோ எடுப்பவரையும் பாய்ந்து சென்று அழைத்து வந்தார்.

‘என்னம்மா, புதுப் பெண்ணே! எப்படி இருக்கிறது வாழ்க்கை?’ என்று கோணலாக சிரித்துக் கொண்டு எங்களை நோக்கி வந்தார் பூபதி. எங்கள் கம்பெனி பியூன்.

ஜமுனா லேசாக தலையசைத்தாள். புன்னகைக்கவோ, மறுமொழி கூறவோ இல்லை.

‘என்னப்பா மாப்பிள்ளை! பெண்டாட்டியை வெளியே அழைத்து வருமளவிற்குப் பெரிய மனுஷனாகி விட்டாய்’ என்றார் பூபதி.

நான் புன்னகைத்தேன்.

அவர் நகரத் தொடங்கியபோது ‘பூபதி, ஒரு துணி எடுத்து வந்து இந்த நாற்காலியைத் துடை. சார் உட்கார வேண்டும்’ என்று மெல்லிய குரலில் கூறினாள் ஜமுனா. கத்தியின் கூர்மையான நுனி போன்ற மெல்லிய குரல்.

ஒரு கணம் கோபத்தோடு ஜமுனாவின் முகத்தைப் பார்த்த பூபதி திகைத்தார். பின் அங்குமிங்கும் பார்த்துவிட்டு ஒரு மூலையிலிருந்த துணியை எடுத்து வந்தார்.



‘இதை விட அழுக்கான துணி கிடைக்கவில்லையா உனக்கு? எத்தனை காலம் பியூனாக இருக்கிறாய்? போய் நல்ல துணியாக எடுத்து வா’ என்றாள் ஜமுனா.

‘ஒரு நிமிஷம் மேடம்’ என்று கூறிவிட்டு குழப்பத்துடன் சுற்றிலும் பார்த்த பூபதி பழனியப்பன் சாரிடம் வேகமாகச் சென்றார். ‘இந்தத் துண்டை கொடுங்கள்’ என்று அவரது தோளில் இருந்த அங்கவஸ்த்திரத்தைத் தானாகவே எடுத்து வந்து நாற்காலிகளைத் துடைத்து விட்டார். ‘உட்காருங்கள் மேடம்’ என்றார்.

அவன் அப்பால் நகர்ந்தபின் ‘பூபதி கம்பெனியில் எவருக்குமே அடங்காதவர்’ என்றேன்.

‘முதலாளி யாரென்பதை எல்லோருமே மறந்து விட்டீர்கள்’ என்றாள் ஜமுனா.

தாலி கட்டியதும் ஜமுனா எழுந்தாள். ‘வாருங்கள்’ என்று என்னை மேடைக்கு அழைத்துச் சென்றாள். ‘மேடைக்கு எதற்கு? பின்புறமாக போய் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பலாம்’ என்றேன். அவளோ மேடையை நோக்கி நடந்து கொண்டே இருந்ததால் நானும் பின் தொடர்ந்தேன்.

மேடையில் ஏறும்போது எங்களைக் கவனித்த அண்ணிகள் எங்களைப் பார்த்து உற்சாகமாக கையசைத்தனர். அண்ணார்கள் வேறெங்கோ கவனமாக இருந்தனர்.

மணமக்களை வாழ்த்தியபின் ‘கிளம்புகிறோம்’ என்றாள்.

‘மேடமும், சாரும் இன்னும் சாப்பிடவில்லை’ என்று பதறினார் பூபதி.

‘சாப்பிட்டுப் போங்கள்’ என்று எங்கள் பின்னால் ஓடி வந்தார் பழனியப்பன் சார்.

‘முக்கியமான இடங்களுக்குப் போக வேண்டியிருக்கிறது’ என்று கூறி விட்டு திரும்பிப் பார்க்காமல் நகர்ந்தாள் ஜமுனா.

மண்டபத்தை விட்டு வெளியே வந்தபின் ‘பரிசு ஒன்றும் தரவில்லையே’ என்றேன்.

‘நாம் வந்ததே பரிசுதான்’ என்றாள் ஜமுனா.

மண்டபத்திலிருந்து கிளம்பி அண்ணாமலைபுரம் சென்றோம். அண்ணாமலைபுரம் பங்களா மற்றவற்றைவிட புதியது. பெரியது. ஜமுனாவிற்கு அதை முதலில் காட்டலாம் என்று நினைத்தேன்.

போக் ரோடை தாண்டும்போது ‘முதலில் உங்கள் கம்ப்யூட்டரை எடுத்துக் கொள்ளலாம்’ என்றாள்.

‘அதைத் தூக்கிக் கொண்டு அலைவானேன்? இன்னொரு நாள் எடுத்துக் கொள்ளலாம்’ என்றேன்.

‘நான் தூக்கி வருகிறேன்’ என்றாள்.

என்னிடம் ஒரு சாவி இருந்ததால், போக் ரோடு வீட்டிற்குள் சென்று கம்ப்யூட்டரை எடுத்து வந்தேன். ‘நாம் உள்ளே வந்து கம்ப்யூட்டர் எடுத்துச் சென்றது பற்றி ஒரு கடிதம் எழுதி வையுங்கள் அல்லது போன் செய்து சொல்லுங்கள்’ என்றாள்.

நான் ஜவுளி அண்ணிக்குப் போன் செய்து சொன்னேன். ‘எதற்கு சொல்கிறாய்? இது என்னடா புது பழக்கம்?’ என்று அண்ணி கோபித்துக் கொண்டார்.

‘ஜமுனா சொல்லித் தந்திருப்பாள்’ என்று பின்னால் காபி அண்ணி சொல்வது கேட்டது.

அண்ணாமலைபுர பங்களாவைக் காட்டி ‘அழகாக இருக்கிறதா?’ என்று கேட்டேன்.

ஜமுனாவோ வேறெங்கோ பார்த்துக் கொண்டு ‘பங்களாவிற்கு மேலே வானத்தில் பறக்கும் வெள்ளைப் பறவையைப் பாருங்கள். என்ன அழகு! சிறகுகள் இருந்தால் நானும் பறந்திருப்பேன். எல்லையில்லாத வானத்தில் உயர உயர பறந்து கொண்டேயிருப்பேன். முடிந்தால் எல்லா மனிதர்களையும் இதுபோல பறக்க வைப்பேன்’ என்றாள்.

‘பங்களா பிடிக்கவில்லையா?’ என்று கேட்டேன்.

‘இதிலென்ன இருக்கிறது? இது இன்னொரு வீடு. அவ்வளவுதானே?’ என்றாள் ஜமுனா.



‘நாம் இந்த வீட்டில் இருந்தால் நமக்குப் பெருமை என்று உனக்கு தோன்றவில்லையா?’ என்று கேட்டேன்.

‘மாற்றிச் சொல்கிறீர்களே. நாம் இருந்தால் இந்த வீட்டிற்குப் பெருமை வரும்’ என்றாள் ஜமுனா.

வீட்டிற்கு நீதிமன்றம் முத்திரை வைத்திருந்ததால் உள்ளே போக முடியவில்லை. ஜமுனா வீடு பற்றி எந்தவித உற்சாகத்-தையும் காட்டாததால், இரண்டு நிமிடங்கள் அங்கே நின்றிருந்துவிட்டு கனப்பாக்கம் சென்றோம்.

மயானத்திற்கு நடுவில் நிலம் இருந்தது. அதனால் மயானத்திற்குள் நுழைந்துதான் போயாக வேண்டும். ஜமுனா பயப்படுவாள் என்று பயந்தேன். அவளோ உற்சாகமாக இருந்தாள். நிலத்தின் மேல் வழக்கு இல்லை என்பதால் உள்ளே நுழைய முடிந்தது. ‘சூளைமேடு வீடும், இந்த நிலமும்தான் நம் மேல் பிரியமாக இருக்கின்றன’ என்றாள் ஜமுனா. அங்கு ஒரு மணி நேரம் இருந்தோம்.

‘புதைப்பது, சமாதி கட்டுவது என்று எதையுமே ஒழுங்காக அழகாகச் செய்யவில்லை. சரியாகச் செய்தால் இந்த மயானத்தில் உலகத்தையே புதைக்கலாம்’ என்றாள் ஜமுனா.

‘எல்லாவற்றையும் பெரியதாக நினைக்கலாம்தான். அதற்காக இப்படியா சொல்வாய்?’ என்றேன்.

சிரித்தாள் ஜமுனா.

‘தாத்தா அரை கிரவுண்டு, ஒரு கிரவுண்டு என்று சின்ன இடங்கள் சிலவற்றை ஆங்காங்கே வாங்கி போட்டிருக்கிறார். அண்ணார்களுக்குத்தான் விவரங்கள் தெரியும்’ என்றேன்.

வரும் வழியில் நுங்கம்பாக்கம் பங்களாவையும் வெளியே இருந்து இரண்டு நிமிடங்கள் பார்த்துவிட்டு வீடு திரும்பினோம்.

## 18. மீசை தாத்தாவின் வரவு

நாங்கள் சூளைமேடு வீட்டிற்கு வந்த மூன்றாவது நாள் தன் ஊன்றுகோலை வேகமாக சுழற்றியபடி மீசை தாத்தா வந்தார். அதை அவர் கையிலிருந்து கிட்டத்தட்ட பறித்து மேஜை மீது வைத்தாள் ஜமுனா.

'என்னம்மா ஜமுனா, உன் அத்தான்கள் என்ன சொல்லி உங்களை வெளியே அனுப்பினார்கள்?' என்று கேட்டார் தாத்தா.

அண்ணார்களிடம் கூறிய கதையை அப்படியே தாத்தாவிடம் கூறினாள்.

அவர் சிரித்துவிட்டு 'நீ சொன்னதிலிருந்து சொல்லாமல் விட்டதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன்' என்றார்.

ஜமுனாவும் சிரித்துவிட்டு எதையும் மறைக்காமல் நடந்தவற்றைக் கூறினாள்.

பின் சிறிது யோசித்த தாத்தா பெருமூச்சு விட்டார். 'கூட்டுக் குடும்பம் பெரிதாகி வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பது என் போன்ற வயதானவர்களின் ஆசை' என்றார்.

'காலத்தை நகராமல் நிற்க வைக்க முடிந்தால் கூட்டுக் குடும்பங்கள் சிதறுவதைத் தடுக்க முடியும்' என்றாள் ஜமுனா.

'எதற்கு எதையும் தடுக்க வேண்டும்? சிதைவதையும், சிதறுவதையும் வளர்ச்சி என்று எடுத்துக் கொண்டு நாம் மாறுவதுதான் நல்லது' என்றார் தாத்தா.

'நாங்கள் கல்யாணத்தன்றே அங்கிருந்து கிளம்பி இங்கு வந்ததில் உங்களுக்கு வருத்தமில்லையே?' என்று கேட்டாள் ஜமுனா.

'உண்மையைச் சொல்லப் போனால் இதுதான் எனக்கு பிடித்திருக்கிறது' என்றார் தாத்தா. பின் என்னைப் பார்த்து 'சாப்ட்வேர் கேட்ட நண்பரைப் போய்ப் பார்த்தாயா' என்று கேட்டார்.



'நேற்று போய் பார்த்தேன். வேலையை வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்' என்றேன்.

'ஜமுனா அனுப்பி வைத்தாளாக்கும்?' என்றார் தாத்தா.

நான் புன்னகைத்தேன்.

தாத்தா ஏதோ கேட்க நினைத்து தயங்கினார். 'முன்பணமாக இரண்டாயிரம் கிடைத்தது. என்னிடம் கொடுத்து விட்டார்' என்றாள் ஜமுனா.

'கொடுத்தானா? அல்லது பிடுங்கிக் கொண்டாயா?' என்று கேட்டு சிரித்தார் தாத்தா.

தன் கையிலிருந்த கண்ணாடி வளையல்களை தாத்தாவிடம் காட்டினாள் ஜமுனா.

'உங்கள் பேரர் தந்த பரிசு' என்றாள் ஜமுனா.

'பரிசு தருவான் என்று தெரியும். கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம் என்று ஏதாவது புத்தகம் தருவான் என்று நினைத்தேன்' என்றார் தாத்தா.

'புத்தகம் தந்தால் நான் படிப்பேனோ, மாட்டேனோ என்ற சந்தேகம் வந்து விட்டது போலிருக்கிறது. அவரே தினமும் சொல்லித் தரப் போகிறாராம்' என்றாள் ஜமுனா.

உரக்க சிரித்தார் தாத்தா.

ஜமுனாவும், தாத்தாவும் பேசிக் கொண்ட விதம் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தாத்தா எவரிடமும் அளவாகவும், இறுக்கமாகவும்தான் பேசுவார். என்னோடு எப்போதாவது சில நிமிடங்கள் இப்படி பேசியதுண்டு.

'இவனைத் தவிர மற்றவர்களுக்கு நான் பெயர் வைக்கவில்லை. சத்தியத்தில் உயர்ந்தது பரமார்த்தம். அந்த அர்த்தத்தில் இவனுக்குப் பரமார்த்தன் என்று நான்தான் பெயர் வைத்தேன். இவனோ பரமார்த்த குரு போல ஒன்றும் தெரியாதவனாக இருக்கிறானே என்று எனக்குப் பல வருடங்களாக கவலை இருந்து வந்தது. இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறேன். இனி எனக்குப் பேத்தி, பேரர்களைப்

பற்றிய கவலை இல்லை' என்று கூறி விட்டு துயரப் பெருமூச்சு விட்டார் தாத்தா.

'கவலைப்படவேண்டாம் தாத்தா, எல்லா கவலைகளும் சீக்கிரம் சரியாகி விடும்' என்று கூறிய ஜமுனா உள்ளே சென்று சித்தப்பா தந்த காகிதக் கட்டையும், வெற்றுப் பத்திரங்களையும் தந்தாள். சித்தப்பா வீட்டிற்குப் போய்வந்த விவரத்தைச் சொன்னாள்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த தாத்தா 'இதை ஏன் இன்னமும் நீ வக்கீலிடம் தரவில்லை?' என்று கேட்டார்.

'உங்களிடம் சொல்லிவிட்டுச் செய்யலாம் என்று நினைத்தேன்' என்றாள் ஜமுனா.

'இனிமேல் என்னிடம் எதையும் கேட்கவோ, சொல்லவோ தேவை இல்லை. நம் குடும்பத்திற்கு எது நல்லதோ அதை எவரிடமும் கேட்காமலே நீ செய்துவிடு' என்றார் தாத்தா. பின் 'நீயே வக்கீலைப் போய்ப் பார்த்து வழக்கை முடித்துவிடு' என்றார்.

'ஆகட்டும் தாத்தா' என்றாள் ஜமுனா.

'குரங்குகளுக்கு இந்த விஷயம் தெரியுமா?' என்று கேட்டார் தாத்தா.

'இன்னமும் சொல்லவில்லை' என்றாள் ஜமுனா.

'நான் சொல்லிக் கொள்கிறேன். கூத்தாடுவார்கள்' என்றார் தாத்தா.

'பாட்டியைத்தான் இன்னமும் பார்க்க முடியவில்லை' என்றாள் ஜமுனா.

'எதை, எங்கே, எப்போது, எப்படிச் செய்யக் கூடாதோ, சொல்லக் கூடாதோ அதை, அங்கே, அப்போது, அப்படிச் செய்பவள், சொல்பவள் உன் பாட்டி. நான் அவளைப் பார்த்த முதல் நாளிலிருந்து அப்படித்தான் இருக்கிறாள்' என்றார் தாத்தா.

'ஒரேயடியாகத்தான் பாட்டியை கேலி செய்கிறீர்கள் தாத்தா' என்றாள் ஜமுனா.



'நான் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து தலைமறைவானபோது, இவள் அண்ணன்தான் ஒரு குடிசையில் ரகசியமாக வைத்து காபியும், கஞ்சியும் கொடுத்து வந்தான். ஊர் முழுவதும் போலீஸ் என்னை தேடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் ஏதோ அவசர வேலை வந்து விட்டது என்று இவளிடம் கஞ்சி எடுத்துக் கொண்டு ரகசியமாக போகச் சொல்லியிருக்கிறான். இவளோ திருவிழாவிற்குப் போவது போல நன்றாக அலங்கரித்துக் கொண்டு, கூடையில் பெரிய டிபன் கேரியரில் விருந்து சாப்பாடு எடுத்து வந்தாள். பகல் நேரத்தில் இவள் சாதாரணமாக நடந்து போனாலே எல்லோருக்கும் சந்தேகம் வரும். அலங்காரம் பண்ணி, முகத்தை முக்காடு போட்டு மறைத்துக் கொண்டு, அங்கேயும் இங்கேயும் திருதிருவென்று விழித்துக் கொண்டு வந்திருக்கிறாள். அது கூடப் பரவாயில்லை. ரகசியமாக தோட்டத்திலும். வயலிலும் வருகிறவள் ஜல், ஜல்லென்று கொலுசு சத்தம் கேட்க நடந்து வருகிறாள். இவள் பின்னோடு போலீஸ்காரன் வந்து என்னைப் பிடித்து விட்டான். என்னை அடிக்கும்போது போலீஸ்காரன் 'இந்த மாதிரி ஒரு பெண்ணை உதவிக்கு வைத்துக் கொண்டு நீயெல்லாம் ஏன்டா தலைமறைவாக நினைக்கிறாய்?' என்று சொல்லிச் சொல்லி அடித்தானம்மா' என்று கூற இருவரும் பல நிமிடங்கள் சிரித்துக் கொண்டிருந்தனர்.

'பாட்டியை போலீஸ் ஒன்றும் செய்யவில்லையா?' என்று கேட்டாள் ஜமுனா.

'இல்லை. இவளைப் பிடித்து வைத்தால் என்னவெல்லாம் பட வேண்டுமோ என்று போலீஸ்காரன் பயந்திருப்பான்' என்று சிரித்த தாத்தா 'அப்படியில்லை. இவள் அண்ணன் ஒரு கட்டுப் பணத்தை கொடுத்தான். அண்ணனையும். தங்கையையும் விட்டு விட்டார்கள். இவள் அண்ணன் எனக்காகவும் பணம் கொடுப்பதாகச் சொன்னான். 'லஞ்சம் கொடுத்து விடுதலை வாங்க மாட்டேன்' என்று கோஷம் போட்டேன். அதற்குக் கூடுதலாக நான்கடி விழுந்தது. நான் விடுதலை கேட்கவில்லை.

சுதந்திரப் போராட்ட தியாகி என்று பெரிய தண்டனை தராமல் அவர்களாகவே விட்டு விட்டார்கள்' என்றார் மீசை தாத்தா.

மீண்டும் இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

'பாட்டி வந்தபிறகுதான் நீங்கள் பெரிய தொழிற்சாலை ஆரம்பித்தீர்கள். அவர் உங்களை விட்டுப் போனபின் திரும்பவும் பழைய நிலைக்கு வர முடியவில்லையே?' என்றாள் ஜமுனா.

சிறிது நேரம் பேசாமல் இருந்த தாத்தா பின் 'கவர்னசத்தையை என்ன செய்தாய்? உன் பெயரைச் சொன்னாலே மிரளுகிறாள்' என்றார் தாத்தா.

'அவருடைய முகம் பார்க்கும் கண்ணாடியாக சில நிமிடங்கள் இருந்தேன். அவரால் தன் முகத்தைப் பார்க்க முடியவில்லை' என்ற ஜமுனா 'வீடு திரும்பி விட்டாரா?' என்று கேட்டாள்

தாத்தா சிரித்தார். 'திரும்பாமல் என்ன? அவளுக்கு நம்மை விட்டால் வேறு எவருமில்லை' என்றார்.

புன்னகைத்தாள் ஜமுனா.

'பரமார்த்தன் அதிர்ஷ்டக்காரன்' என்றார் தாத்தா.

அதன்பின் அடிக்கடி அதையே எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தார்.

*(அடுத்து வரும் சில மாதங்களில் மலர்ந்த ஜீவியத்தில் 39 அத்தியாயங்கள் கொண்ட மீன்கொடி தொடர்ந்து வெளியாகும். கால இடைவெளியின்றி உடனே தொடர்ந்து வாசித்து முடிக்க விரும்பும் அன்பர்கள்* **cs@motherservice.net** *என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்பு கொண்டால் முழு நாவலும்* **PDF** *வடிவத்தில் அனுப்பி வைக்கப்படும்)*

(தொடரும்)

★★★

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

## விருப்பான வெறுப்பு

பிறர்மீது எழும் ஆசை விருப்பாகும். ஆசையின் ஆழம், வேகம், தீவிரம் அதிகமானால் அது வெறுப்பாகும். ஆசைக்கு எல்லா விருப்பின் அம்சங்களும், வெறுப்பின் அம்சங்களும் உண்டு. நட்பின் விருப்பு பிரிய அனுமதிக்காது. வெறுப்பின் அம்சம் பார்க்க அனுமதிக்காது. யோகம் வெறுப்பை விருப்பாக்கும். தீவிர வாழ்வு விருப்பை வெறுப்பாக்கும். ஒன்று மற்றதாக மாறுவது கடைசி காலத்தில். ஆழம் அதிகமானால் அடுத்த ஜென்மத்தில் வாழ்வு யோகமானால் நாள் சுருங்கும். இறைவனை வாழ்வில் பொருளாகக் காண்பவன் 400 சம்பளம் 40,000 கோடி செல்வமாக 60 ஆண்டில் மாறியதைக் காண்பான். உறவில் அதே மாற்றத்தைக் காண விரும்பினால் கொடுமை செய்தவர் 12 ஆண்டுகள் கழித்து ஆத்ம உயர்வை ஏற்றுப் பாராட்டுவார். தீவிரம் வாழ்வையும் பிறவியையும் கடந்தால் சமாதிகட்ட கங்கணம் கட்டியவர் ஓராண்டில் தனக்கே அது பலித்ததைக் கண்டார். தத்துவ ஞானம் எவ்வளவு உயர்ந்ததானாலும் எதிரி நேரே அவமானப்படுத்துவதை அதிர்ஷ்டம் என மனம் ஏற்காது. திருவுருமாற்றத்தை முனைந்து செய்ய பல ஆண்டு கழிந்த நிகழ்ச்சியைக் கருதினாலும் பழைய ஆத்திரம் பொங்கும். பலனை நினைத்தால் சற்று அடங்கும். பலனுக்குரிய கருத்தை நினைத்தால் மேலும் ஓரிழை குறையும். அதன் அடிப்படையான தத்துவம் புரிந்து மனம் ஏற்றுக் கொண்டால், காரம் குறைந்து மனம் மாற சம்மதிக்கும். அந்த நேரமும் பேசினால் பழைய குரோதமே சொல்லாக வரும். மனித வாழ்வு திருவுரு-மாற்றத்தை அறியாது. மன்னிக்க வேண்டும், மறக்க வேண்டும் என்பவை பாபியை மகானாக்கும். அதுவும் மனிதனால் முடியாது. அது முழுவதும் பலித்த வாழ்வு திருவுருமாற்றத்தை ஏற்கவில்லை. உலகம் அற்புத எழில் பொருந்தியது என ஆத்மா ஏற்றால் அநியாயம் ஆண்டவன் நியாயம் எனவும், அவமானம் ஆத்ம ஞானம் எனவும் மனம் ஏற்கும். மனம் ஏற்றதை ஆத்மா ஏற்று அதை மீண்டும் மனம் ஏற்று வாய் பேசும்பொழுது உள்ளம் பூரிப்பது திருவுருமாற்றம். இயல்பான குதூகலம், அதுவும் எதிரியின் நினைவால் எழும் குதூகலம் திருவுருமாற்றமாகும். பெற்றோர், பிள்ளைகள், தம்பதியில் அது எதிரியானது. அப்படி ஒருவருக்கு அரிபொருளாக அது அமைந்தால் திருவுருமாற்றம் அவரைச் சாதகராக, யோகியாக, சத்திய ஜீவனாக மாற்றும். அவர் அன்னை பகவான் நிலையை எய்துவார். சாதுவுக்கும் இது சிரமம். மகானுக்கும் எட்டாதது இந்நிலை. மனம் ஏற்றால் சொல் ஏற்காது. மனமும் சொல்லும் ஏற்றால் எதிரி ஏற்க மாட்டான். பல ஆண்டாக எவரும் உதவி செய்ய முன்வராத காரியத்தை எவராலும் செய்ய இயலாது என ஆசைப்படுபவர் மனம் அறிகிறது. அதைச் செய்ய ஒருவர் வந்தார். அவரை மூன்று முறை திரும்பத் திரும்பச் செய்யச் சொல்ல பல முறை திட்டினார், கடிந்தார். வேலை முடிந்து பலன் வந்ததை உதவி செய்தவருக்குச் சொல்லவில்லை. அவரே வாழ்த்துக் கூற வந்தபொழுது பேச மறுத்தார். ஊர் முழுவதும் பொறாமைப்பட்டு விசாரிக்கவுமில்லை. உதவி செய்து அடிபட்டு அவமானப்பட்டவர் வந்து விருந்து வைத்தபொழுது, “நான் விரும்புவதைத் தரும் அதிர்ஷ்டம் உங்களுக்கில்லை” என்று “எதிரி” கூறியது மனித சுபாவம். எல்லோரும் ஏற்றாலும் எதிரி ஏற்க மாட்டான் என்பது சுபாவம்.

## மனம் வரவில்லை
## (Subconscious difficulty)

தெளிவாக உள்ள திறமை, மறந்தும் செயல்படும் பெரிய திறமை, தெரியும் சிரமம், மனம் வரவில்லை* என்ற மறைந்து செயல்படும் திறமைக் குறைவு ஆகியவை மனிதனுக்குரியவை. இவற்றுள் மனம் வரவில்லை என்ற நிலையை அதன் பல்வேறு அம்சங்கள் மூலம் கூற விரும்புகிறேன். 1) தம் சர்வகலாசாலைக்கு வந்த அகில இந்திய தலைவருக்குப் பரிசாக அளிக்க அதன் முதல்வர் 30 முக்கிய நூல்கள் - அவர்கள் பிரசுரித்தது - கொண்டு வந்தார். ஒவ்வொரு நூலின் கருத்தையும் சில நிமிஷங்களில் அழகாகக் கூறினார். “நான் இந்நூல்களைப் பரிசாக அளிக்கும்முன் அவற்றைப்பற்றிக் கூறுகிறேன்” என்று கூறி முடித்தார். அங்கு வந்த மற்றொரு இளைஞர் தலைவரிடம் பேசுவதைக் கேட்க விரும்பினார். அவர் முடித்தபின் நூல்களைத் தர மறந்து எழுந்து நூல்களுடன் வெளியே போக முனைந்த பொழுது தலைவர் அவரை நிறுத்தி நூல்களைக் கேட்டு வாங்கிக் கொண்டார். மனம் வரவில்லை. 2) வரன் அமைய வேண்டும் என பேச்சு ஆரம்பிக்கும்முன் பெண் வீட்டார் “60 பவுன் போடுகிறோம்” என்றனர். வரன் அமைந்து மணம் முடிந்தபின் பவுன் போட்டார்களா எனக் கேட்கும் அவசியம் ஏற்படவில்லை. கணவனை நகை தரும்படி பெண் நச்சரித்தாள். 3) உரிய பிரமோஷனை உடன் உள்ளவர்க்குக் கொடுக்காமல் மாரடைப்பால் ஒருவர் இறந்தார். 4) முழு உரிமையுடன் தயக்கமின்றி தர வேண்டிய எள்ளு மூக்கு போன்ற உதவியைச் செய்ய வேண்டியவர் செய்யாமல் “என்ன செய்யப்போகிறீர்கள்” எனக் கேட்டார். அவரிழந்த பெரும் பதவி திரும்ப வந்தபொழுது அடுத்தவர் உரிமையுடன் எடுத்துக் கொண்டார். பெற்றோர், குருஸ்தானத்திலிருந்து வாழ்த்த வேண்டியவர், “உன் தொழில் வெற்றி பெறக் கூடாதல்லவா” என்றார். பெரிய சொத்தில் 1/3 பாகம் உள்ள உரிமையை பார்ட்னர் மறுத்து வழக்காடி முழுச் சொத்தையும் எதிரிக்குக் கொடுத்தார். மனம் வர வேண்டும். நல்லெண்ணம் எழ மனம் தானே விழைய வேண்டும். அதற்கு **subconscious difficulty** தடையாக இருக்கக் கூடாது. அது **subconcious urge**-ஆக நல்லெண்ணத்தை எழுப்பும் இயல்பாக சந்தோஷம் பெறுவது அன்பருக்குள்ள அன்னை முத்திரை.

* **Conscious abiltiy, Subconsious Capacity, Conscious obstacle, Subconscious unwillingness.**